திராவிடநாடு

20—8—61 | வாரவெளியீடு | விலை 16 காசு

# திருவிடத்தை மீட்கத்திரள்வீர்!

—[ நா. இளங்கோ ]

ஓயாமல் உழைக்கின்றோம் நமது வாழ்வு
ஓங்கவில்லை! உயரவில்லை! துன்பம் வந்து

பாயாமல் இருப்பதற்குப் பாடு பட்டும்
பலனில்லை! பட்டினியால் வாடி இங்கே

வேயாத குடிசையிலே வாழு கின்றோம்!
வெங்கொடுமை நோயாலே வீழுகின்றோம்!

தாயாலே வளராத சேயைப் போல
தரங்கெட்டு நாமெல்லாம் தாழுகின்றோம்!

மீன்புலிவிற் கொடிகள் இமயத்தில் ஏற்றி
மிக்கவீரம் கொண்டமுடி மன்னர் ஆள,

வான்பதியைப் போல்உலகில் புகழ் பரப்பி
வளமாக உரிமையோடு வாழ்ந்தோம்! இன்று

ஏன் இந்த நிலையடைந்தோம்! நமது நாட்டில்
எத்தராட்சி இருப்பதால் உரிமை இழந்தோம்!

தேன்மொழியை உடையவரே! பகைவராலே
தேய்கின்ற திருவிடத்தை மீட்கத் திரள்வீர்!

# உலகை உருவாக்கிய சிற்பி
# தாமஸ் ஜெபர்ஸன்

**சீ. பெ. கண்ணன்**

"உலக மக்கள் அனைவரும் ஏற்றத் தாழ்வின்றிப் படைக்கப்பட்டவர்கள்; உயிர் வாழ்தல், உரிமை வாழ்க்கை, இன்ப நாட்டம் முதலிய பிரித்தற்கரிய உரிமைகள் சிலவற்றை இயற்கை அவர்களுக்கு வழங்கியுள்ளது" என்னும் வயிர மொழிகளை அமெரிக்க விடுதலைப் பிரகடனத்தில் பொறித்த பெரியார், தாமஸ் ஜெபர்ஸன். எனவே அமெரிக்க நாடு பெற்ற பழம்பெருஞ் செல்வங்களுள் அவரது பணியும் ஒன்றாகிவிட்டது. உலகப் பெரியார் பலர் வாழ்ந்த காலம் தாமஸ் ஜெபர்ஸன் வாழ்ந்த காலம். அக்காலத்தில் உண்மையாகவே அவர் சிறப்புமிக்க பெரியாராய்த் திகழ்ந்தார். ஜார்ஜ் வாஷிங்டனும் தாமஸ் ஜெபர்ஸனும் அமெரிக்கப் புரட்சியின் இணையற்ற மாபெருந் தலைவர்கள்.

தமது நாட்டின் மூன்றாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், ஜனநாயகம் கண்ட அமெரிக்க வீரர்களுள் புகழ்மிக்கவர். அதுவுமல்லாமல், அக்காலத்து மாபெரும் முற்போக்குச் சிந்தனைச் சிற்பிகளிலும் தாமஸ் ஜெபர்ஸன் ஒருவர். அவர், 1743, ஏப்ரல் 13ம் தேதி பிறந்தார். மாணவராய் இருந்த காலத்திலேயே அவர் அறிவு நலம் படைத்தவராக விளங்கினார். அக்காலத்தில் இலத்தீன், கிரீக், பிரெஞ்சு மொழிகள் பயின்றார். பிற்காலத்தில் ஸ்பானிஷ், இத்தாலியன் மொழிகளிலும் புலமை பெற்றார்.

முதன்முதலாக அவர் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். விரைவில் அத்தொழிலில் பொருளீட்டத் தொடங்கிவிட்டார். எனினும், கொள்கைக்காக அத்தொழிலை விட்டுவிட்டார். வழக்கறிஞர் ஒன்றையும் நம்பமாட்டார். ஒன்றுக்கும் ஒத்துவரமாட்டார். ஓயாமல் பேசுவார்.

"மக்களிடத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருந்து வருகிறது. நீதிபதிகளும் மக்களிடத்தில் அவ்வாறே நீதியை வழங்கி வருகிறார்கள்" என்று எண்ணிய தாமஸ் ஜெபர்ஸன், இத்தகைய நிலையைப் போக்க வேண்டும் என்று ஒரு நீதிபதியாகத் தமது வாழ்க்கையைத் தொடங்கினார். 1769-ல் வர்ஜீனியா சட்டமன்றத்தின் உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார், அங்கு அவருக்குத் தமது கொள்கைகளைப் பரப்பும் வாய்ப்புக் கிடைத்தது. செயற்கையான சலுகைகளையெல்லாம் ஒழித்துவிடவேண்டும்; திறமைக்கும் குணத்துக்கும் சிறப்புச் செய்ய வேண்டும். சுதந்திர சமுதாயத்தில் திறமையும் குணநலனும் உள்ளவர்களே, தலைவர்களாக இருக்கவேண்டும். இவை ஜெபர்ஸன் கொள்கைகள் ஆகும்.

"பிரிட்டிஷ் அமெரிக்காவின் உரிமைகள்பற்றிய கருத்துச் சுருக்கம்" என்னும் வெளியீடு ஒன்றை அவர் எழுதி வெளியிட்டார். அதில் அமெரிக்கா சுதந்திரம் பெற்றாக வேண்டும் என்று வன்மையாய் எடுத்துரைத்தார். எனவே, ஆரம்ப காலம் முதல், ஜெபர்ஸன் புரட்சியின் முன்னணி வீரர்களில் ஒருவராக விளங்கினார். காண்டினென்டல் காங்கிரஸின் (1775—1776) உறுப்பினராக இருந்தபோதுதான் அவர் புதிதாக உருவான தமது நாட்டுக்கு மாபெரும் பணியாற்றினார். வன்மையாகவும் எளிமையாகவும் எழுதும் திறன் அவருக்கு இருந்ததால், விடுதலைப் பிரகடனத்தை வரையும் பேறு பெற்றார். ஜெபர்ஸனின் இயல்பைத் திறம்படப் புலப்படுத்தும் பத்திரம் வேறு ஒன்றும் இல்லை, தேசிய தத்துவத்தைஅழுத்தந்திருத்தமாகச் சுருங்கக் கூறிவிட்டார். எனவே, அது அமெரிக்காவின் உரிமைகளுக்கு—ஏன் உலக உரிமைகளுக்கே ஒரு எடுத்துக்காட்டாக அன்று முதல் இன்றுவரை விளங்கி வருகிறது.

உரிமை உறுதியான பின் ஐந்தாண்டுகள் (1784—1789) அவர் பிரான்ஸில் அமெரிக்காவின் பிரதிநிதியாகப் பணியாற்றினார். அக்காலத்தில் ஐரோப்பாக் கண்டத்தின் நட்பு நாடுகளை அமெரிக்காவின் நட்பு நாடுகள் ஆக்கிவிட்டார். ஐரோப்பாவில் பெஞ்சமின் பிராங்ளினைத் தவிர, வேறெந்த அமெரிக்கரும் ஆற்றாத அரும் பணி ஆற்றிய ஒப்பற்ற பெரியார் தாமஸ் ஜெபர்ஸன்.

ஜார்ஜ் வாஷிங்டன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், வெளிவிவகார இலாகாக் காரியதரிசியாகத் தாமஸ் ஜெபர்ஸனை நியமித்தார்கள். ஜனாதிபதியிடம் ஜெபர்ஸன் உண்மையான பற்றுள்ளவராக இருந்தார். எனினும், ஜெபர்ஸனுக்கும் நிதிக் காரியதரிசியாக இருந்த அலெக்ஸாண்டர் ஹாமில்டனுக்கும்,மத்திய அரசாங்கம் மாநிலங்

( 4-ம் பக்கம் பார்க்க )

87
# தமிழன் எண்ணம்

ர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (20—8—61) தனிப்பிரதி 16 காசு [இதழ்

ஆகஸ்ட் 15!—இந்த நன்னாள், பொன்னாள், தூய்மையான நாள்; கட்சி—மத வேறுபாடின்றி இவ்வுபகண்டத்திலுள்ள அனைவராலும் கொண்டாடப்படும் ஒப்புயர்வற்ற சிறந்த நாளாகும்.

இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அடிமை விலங்கால் பிணைக்கப்பட்டிருந்த மக்கள் விடுதலை பெற்ற பெருநாளாகும்.

எனவே, காந்தி அடிகளின் அறிவுரை கேட்டு, அவர் காட்டிய அறவழி நடந்து பெற்ற சுதந்தரம், நன்கு நீடித்து நடைபெறவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்கமுடியாது.

இந்த உபகண்டத்தில் பிறந்த ஒவ்வொருவரும், தமக்குக் கிடைத்த பெறற்கரிய பெரும் பேறு என்று கொள்வதிலும் அப்பழுக்கற்ற ஒருமித்த கருத்தினையே கொண்டவராவர்.

ஆனால், பெற்ற சுதந்தரம் பேணிக் காக்கப்படுகிறதா?

சுதந்தரப் பிரகடனம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறதா?

காந்தி அடிகளின் அறிவுரை கலந்த வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டதா?

என்ற இன்னபிற, நாட்டுக்கும் அதில்வாழும் மக்களுக்கும் இன்றியமையாது தேவைப்படும் கோரிக்கைகளைச் சுதந்தரம் பெற்றுப் பதினன்கு ஆண்டுகளாகியும் இன்னும் நிறைவேற்றவில்லை என்ற பெருங்குறை அல்லது குற்றச்சாட்டு சுதந்தர ஆட்சி நடாத்தும் பொறுப்பிலிருப்பவர்கள்மேல் சுமத்தப்பட்டு வருகிறது.

பெற்ற சுதந்தரம் அனைவருக்கும் அல்ல, ஒரு சிலருக்கு மட்டுமே என்ற போக்கு அவ்வப்போது தலைகாட்டுமென்பதை முன்கூட்டியே தெரிந்துவைத்திருந்த காந்தி அடிகள்,

> **"சுதந்தரம் கிடைத்துவிட்டது. இனிக் காங்கிரசு என்ற ஒரு தனி அமைப்புத் தேவையில்லை. அதைக் கலைத்துவிடுங்கள்"**

என்று அறிவுரை கூறினர், ஆனால், அவரது சீடர்கள் நாங்கள்தான் என்று கூறிப் பெருமிதங்கொள்ளும் காங்கிரசார் தம்முடைய அறிவுரையைச் செயல்படுத்துகிருர்களா என்று பார்ப்பதற்குள் பாதகன் ஒருவன் அந்த உத்தமரை இல்லாதொழித்துவிட்டான்.

காந்தி அடிகளின் இந்தச் சிறந்த யோசனையின்படி காங்கிரசார் நடந்துகொண்டிருந்தால், அதாவது காங்கிரஸ் என்ற அமைப்பைக் கலைத்திருந்தால், எத்தனையோ பெரிய பெரிய குழப்பங்களையும் தொல்லைகளையும் தவிர்த்திருக்க முடியும்.

மொழிவழி, இனவழி மக்கள் ஆட்சிபுரியவும், இந்த உபகண்டத்திற்கு ஏற்படும் ஆபத்துக்களைத் தடுக்கவும் எளிதாக வழி ஏற்பட்டிருக்கும்.

காங்கிரஸ் தனது சுதந்தரப் பிரகடனத்தை நடைமுறைக்குக் கொண்டுவரத் தவறிவிட்டது.

காந்தி அடிகளின் அறிவுரையை அலட்சியப் படுத்திவிட்டது.

எனவே, நாட்டின் நாலா பக்கங்களிலும் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்பட ஏதுவாயிற்று.

மொழிவழி பிரிந்து, இனவழி ஒன்றி நின்று ஆட்சி புரியும் நல்ல ஏற்பாட்டை காங்கிரஸ் என்ற பெயரை இன்னும் வைத்துக்கொண்டு, அதன் பேரால் ஆட்சி நடத்துபவர்கள் ஏற்க மறுப்பது, உண்மையிலேயே பெற்ற சுதந்தரத்தை அதன் பாதையில் செல்லவிடாமல் வேறு பாதையில் செலுத்துவதாகும் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகிவிட்டார்கள்.

இந்தச் சீரிய ஏற்பாட்டினல், இந்த உபகண்டத்தின் பொதுவான ஒன்றுபட்ட நிலை எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டாதென்பதை நாம் மட்டுமல்ல, நாட்டின் முன்னேற்றத்தில் நாட்டம் கொண்ட நல்லவர்கள் பலரும் ஆதாரபூர்வமான காரணங்களை எடுத்துக்காட்டிக் கூறி வருகின்றனர்.

என்றபோதிலும், ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருப்போர், இந்த ஏற்பாடு ஏதோ தங்களுக்கு ஆபத்தை உண்டாக்கிவிடுமோ என்று தவருக எண்ணிக்கொண்டுள்ளனர்.

எனவே, பெற்ற சுதந்தரம் பேணிப் பாதுகாக்கப்படவேண்டுமென்பதில் உண்மையிலேயே அக்கறை கொண்டுள்ள நாம் நம்முடைய கோரிக்கை நியாயமானது—தேவையானது—புறக்கணிக்க முடியாதது—சுதந்தரத்துக்கு இடையூறு உண்டாக்காதது—மாருக, அதற்கு வலிவும் பொலிவும் உறவும் உதவியும் தரவல்லது என்று கூறிப், பெற்ற சுதந்தரத்தை மக்களின் நன்மைக்கு நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வதற்கான சிறந்த முயற்சியில் இனியாவது ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருப்பவர்கள் முனைய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

களின் உரிமைகள்பற்றிய பிரச்சினை களில் முரண்பாடு ஏற்பட்டது. ஜெபர்ஸன் தம் பதவியினின்று விலகிப் புதிய கட்சி ஒன்றின் தலைவரானார். அதுவே ஜனநாயக கட்சி ஆயிற்று. இவ்வாறு அமெரிக்க அரசியலில் இருகட்சி உருவாயிற்று.

புதிய கட்சியின் தலைவராக அவர் 1796-ல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். தேர்தலில் மூன்று வாக்குகள் குறைந்ததால் அவர் தோல்வியுற்றார். ஜான் ஆடம்ஸ் வெற்றி பெற்றார். அக்காலத்து வழக்கப்படி ஜெபர்ஸன் துணை ஜனாதிபதியாக ஆனார். செனட் சபைத் தலைவரான அவர், "சட்ட மன்ற வழக்கங்கள்" எனும் நூல் எழுதினார். அது சிறிது திருத்தப் பட்டு இன்றும் அமெரிக்கச் சட்ட மன்றத்தில் பயன்படுத்தப்படுகிறது.

ஜெபர்ஸன் 1800-ம் ஆண்டில் தமது நாட்டின் மூன்றாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டு கட்சிகள் தேர்தல் பிரச்சாரம் நடத்திய காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஜனாதிபதி ஜெபர்ஸனே; வாஷிங்டன் நகரில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற முதல் ஜனாதிபதியும் அவரே. வெள்ளை மாளிகை என்னும் புதிய ஜனாதிபதி இல்லத்தில் ஆட்சி தொடங்கியவரும் அவரே.

ஜெபர்ஸன் தமது பதவிக்காலத்தில் லூஸியானாவை விலைக்கு வாங்கினார். எனவே 1804-ல் மீண்டும் அவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மிஸிஸிப்பி நகருக்கு மெற்கேயுள்ள பரந்த பிரதேசம் லூஸியானா. அது பிரான்சின் பிரதேசமாக இருந்தது. பிரான்ஸ் செய்த போரின் செலவுக்குப் பணம் தேவையாக இருந்ததால் இந்தப் பிரதேசத்தை அமெரிக்காவுக்கு விற்க நெப்போலியன் இணங்கினார்.

லூஸியானாவை விலைக்கு வாங்கியதற்கு ஜெபர்ஸனே முக்கிய காரணம். அதனால் அமெரிக்காவுக்கு, பெருமதிப்புள்ள ஒரு பெரிய நிலப் பகுதி கிடைத்தது. இன்றைய ஏழு அமெரிக்க மாநிலங்கள் அப்பிரதேசத்தில் உள்ளன. வேறு ஐந்து மாநிலங்களின் பகுதிகளும் அதில் உள்ளன. கோடிக்கணக்கான அமெரிக்கர்கள் அப்பகுதியில் இன்று வாழ்கின்றனர்.

ஜெபர்ஸன், பத்திரிகைச் சுதந்திரத்தைப்பற்றி வலியுறுத்திக் கூறியுள்ளார். அதுவும் அவர் ஆற்றியுள்ள பெரும்பணி. பத்திரிகைகள் தம்மை இழிவுப்படுத்தித் தாக்கிய போதும், பகைமை கொண்டு எதிர்த்தபோதும் அவர் தமது கொள்கையை விட்டுவிடவில்லை.

ஜெபர்ஸன் பலதுறைகளிலும் வல்லுநராகத்திகழ்ந்திருந்தார். அவர் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் பலர், அவரது விஞ்ஞானத் திறமைகளை விரித்துரைப்பதில்லை. எனினும், அவர் தமது காலத்தில் சிறப்பான பலவகைத் திறமை வாய்ந்தவராக விளங்கினார் என்பது உண்மை. அவர் உயர்ந்த குறிக்கோள்கள் உள்ளவர் அதே சமயத்தில் நடைமுறைத் துறையிலும் ஆற்றல் மிக்கவர். அவர் அறிஞராகவும், பொறியியலராகவும், கட்டிடக் கலைஞராகவும் விளங்கினார். புதிய கலப்பை ஒன்றை அவர் உருவாக்கினார். பல்லாண்டுகள் அது பல இடங்களில் பயன்பட்டது. போரடிக்கும் பொறியை அமெரிக்காவில் உபயோகிக்கச் செய்தவர் அவரே. அறுவடைப் பொறி ஒன்று அமைக்க அவர் ஊக்கமூட்டினார். பயிர்களை மாற்றி மாற்றி விதைக்கும் வழக்கத்தை முதன் முதல் கையாண்டவர்களுள் அவர் ஒருவர். அடுக்கு நிலங்களில் உழுது பயிர் செய்ய முதன் முதல் வழி செய்தவர்களுள் அவர் ஒருவர். வானியல் துறையிலும் புதுமைகாண வழி காட்டியவர் அவர். 'ஸ்டாப் வாச்' கண்டு பிடிக்கப்படுவதற்கு ஊக்கமூட்டியவர் அவர். நீர்மூழ்கிக் கப்பல் கட்டலாம் என்று முதன்முதல் நினைத்தவர்களுள் அவர் ஒருவர்.

புத்தகப் படிப்பில் அவர் ஆர்வம் மிகுந்தவர். வாழ்நாள் முழுவதும் அவர் புத்தகங்களைத் தேடிச் சேர்த்துக்கொண்டே இருந்தார். அவர் தமது வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் பத்தாயிரம் அரிய புத்தகங்களை அமெரிக்க அரசாங்கத்துக்கு விற்றார். இன்றைய சட்டமன்ற நூலகத்தின் கருவாய் விளங்குவது அவர் விற்ற நூல் தொகுப்பே. வர்ஜீனியா பல்கலைக் கழகத்தை நிறுவியவர் ஜெபர்ஸன். அவர் செய்த இறுதி பொதுத் தொண்டு அதுவே.

ஜனநாயகக் கொள்கைபற்றி வன்மையாகப் பேசிய அமெரிக்கப் பெரியார் ஜெபர்ஸன். அவர் 1826 ஜூலை 4ல்-விடுதலைப் பிரகடனத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவுறும் சமயம் —காலமானார். விடுதலைப் பிரகடனமே அவர் செய்த சிறப்புமிக்க சாதனை. அவர் தமது கல்லறையில் பின்வரும் சொற்கள் பொறித்தால் போதுமென்று கருதினார். "இங்கு அடக்கம் செய்யப்பெற்றிருக்கும் தாமஸ் ஜெபர்ஸன் அமெரிக்க விடுதலைப் பிரகடனம் வரைந்தவர், வர்ஜீனியா மத உரிமைச் சாஸனம் எழுதியவர், வர்ஜீனியா பல்கலைக் கழகம் நிறுவியவர்."

★

# அழைப்பு

நிகழ் வள்ளுவராண்டு 1992 ஆவணித் திங்கள் 11-ஆம் நாள் (27—8—61) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில்,

எனது மகள்

**மணிமேகலையை**

எ. செயராமன் அவர்களின் புதல்வன்

**செ. கமலக்கண்ணனுக்கு**

இல்வாழ்க்கைத் துணைவியாக்கும் திருமணவிழா, பெரிய காஞ்சிபுரம் கீழண்டை இராசவீதியிலுள்ள யாதவாள் சத்திரத்தில் **அண்ணா** அவர்கள் தலைமையில் நடைபெறும். நண்பர்கள் இதனையே அழைப்பாகக்கொண்டு தாங்கள் இல்லக் குழுவினருடன் வருகைதந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன். அன்பன்:

**சி. வி. எம். அண்ணாமலை**

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர்.

தம்பி! காஞ்சீபுரம்.

20 8—'61.

மேளதாளம் முழங்க, வாழ்த்தொலிகள் பீறிட்டுக் கிளம்ப, கோலோச்சுவோருக்
குப் பாராட்டுப் பண்பாடியபடி கொடி ஏந்திகள் நடைபோட, கோலாகலமாக, 'சுதந்திர
தின' ஊர்வலம், எங்கள் தெருவில் போய்க்கொண்டிருந்தபோது, அவர்கள் நம்புவார்
களோ இல்லையோ, என் வார்த்தையை—நான், பண்டித ஜவஹர்லால் நேருவின் சொற்
பொழிவுகள் கொண்ட தொகுப்பு நூலைப் படித்துக்கொண்டிருந்தேன். ஊர்வலத்திலே
கலந்துகொண்டவர்களிலே, எத்துணை பேர், அந்த நூலைப் படித்தவர்களோ, நான்
அறியேன்! பலர், நாடாளும் நிலையைக் காங்கிரஸ்கட்சி பெற்ற பிறகு,
கதர் அணிய ஆரம்பித்தவர்கள் என்பதை நானும் அறிவேன்—ஊரறியும்.
எனவே, அவர்கள், பண்டிதரின் சொற்பொழிவுப் புத்தகத்தை, ஏன் தொட்
டிருக்கப்போகிறார்கள், பாபம்! அதிலும், நான் குறிப்பிடுவது, இந்திய
துரைத்தனத் தலைவராக நேருபண்டிதர் அமர்ந்த பிறகு ஆற்றிய உரைகள்
அல்ல! அன்றோர் நாள்! விடுதலை இயக்கத்தின் முன்னணி நின்று,
இலட்சிய முழக்கமிட்ட நாட்களில்! "கனவு காண்கிறான் இந்தச் சீமான்
மகன்! கற்றதைக் கதைக்கிறான்! கவைக்குதவாதன பேசுகிறான்! பரந்த
சாம்ராஜ்யத்துக்கு அதிபனுக உள்ள வெள்ளையனைப் 'பயமறியாப் பருவம்' காரணமாக
எதிர்க்கிறான்—நடக்கிற காரியமா இது?"—என்று கண் சிமிட்டியபடி, கேலிப் புன்னகை
தவழ, 'மேதைகளும்' 'அனுபவக் களஞ்சியங்களும்', பேசிக்கொண்டிருந்த நாட்கள்!
அந்த நாட்களில், பண்டிதர் பேசியவற்றினைப் படித்துக்கொண்டிருந்தேன் — இன்று
கிடைத்த அரசியல் செல்வாக்கைச் சுவைத்தபடி, தேசியத்தோழர்கள், உரத்த குரலிலே
முழக்கம் எழுப்பிக்கொண்டு, ஊர்வலம் வந்தபோது. எப்படிப்பட்ட நேரு தெரிந்தார்
என்கிறாய், தம்பி! எழுச்சியூட்டும் நேரு! தளைகளைப் பொடிப் பொடியாக்கிவிடவேண்டும்
என்ற துடிப்பினை எவரும் கொள்ளத்தக்க வீரம் ஊட்டும் பேச்சாளர்! அச்சம் தயை,
தாட்சணியம், அருகே நெருங்கமுடியாத நிலையினர்! மாற்றானிடம் மண்டியிடுபவன்,
மாபெரும் துரோகி! பேரம் பேசுபவன் கோழை! குழைபவன், கோமாளி! திகைத்துக்
கிடப்பவன், உருவில் மட்டுமே மனிதன்!—என்று, பண்டிதர் நாடெங்கும் இடிமுழக்க
மெனக் குரல் கொடுத்துச் சோர்ந்த உள்ளங்களைத் தட்டி எழுப்பிப், படை திரட்டிக்
கொண்டு வந்த நாட்களிலே, அவர் பேசியவை, இன்றும், என்றென்றும், விடுதலைக்
கிளர்ச்சியிலே, தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ள, எவருக்கும், வீர உணர்ச்சியை ஊட்ட
வல்லவை!!

"ஆனாலும்"—"என்ன செய்வது"—"இப்போதைக்கு இதுதான்"—"இயன்ற அளவு
தானே"—"படிப்படியாக"—என்ற சொற்கள், பேச்சிலே இடம் பெறாத நாட்களைக்

# முதல் பந்தி!

குறிப்பிடுகிறேன். உலைக்களத்திலிருந்து பழுக்கக் காய்ச்சப்பட்ட நிலையில் வெளியே எடுக்கப்படும் இரும்புக் கம்பியைப் பார்த்திருப்பாயே, தம்பி! அந்த நேரு!! ஆமாம்! இப்போது உள்ள, பட்டுக் குஞ்சம் கட்டப்பட்டுப் பளபளப்பான உறையில் இடப்பட்டுள்ள உடை வாள் போன்ற நேரு அல்ல! சந்தனப் பொதிகையில் சிந்துபாடி விந்தைகள் செய்திடும் பூங்காற்று! மின்சாரவிசிறிதரும் காற்று அல்ல!! மரத்திலே பழுத்து, காற்றுக்கு ஆடிடும் கனி! கீழே விழுந்து, ஒரு பக்கம் கறுத்துப்போன நிலையிலே உள்ள பழம் அல்ல! 'பாரதத்தை'க் கட்டிக் காப்பாற்றவேண்டும் என்பதற்காகப், பலரும் பரிவுகாட்டிப் பக்கம் நின்று துணை புரியவேண்டும் என்ற முறையைத் துணைகொண்டு இலட்சியத்தைக் குறைத்தும் மறைத்தும், தேய்த்தும் உருக்குலையச் செய்துவிட்ட நிலைக்குத் தம்மைத் தாமே துரத்திக் கொண்ட துரைத்தனத் தலைவரின் பேச்சு அல்ல—அதிலே தயக்கம், தடுமாற்றம், முரண்பாடு, முணுமுணுப்பு, மிரட்டல் என்பவைகள் கலந்துவிட்டன!

தொடுத்த கணை 'விர்'ரெனப் பாய்கிறதல்லவா! பாயும் அம்பு!! நான் குறிப்பிடும் நேரு!!

குறி தவறிக் கீழே வீழ்ந்து கிடக்கும் அம்பு போன்றுள்ள நிலையினராகிவிட்ட நேரு அல்ல!!

ஊர்வலத்தினர், உலக நாடுகளிடம் கடன் வாங்கவல்ல, உள்நாட்டிலே தேர்தல் வெற்றி பெற்றுத் தரத்தக்க, எதிர்க்கட்சிகளை அழித்தொழித்திடும் ஆற்றலைக் காட்டி நிற்கும், நேருவின் புகழ்பாடிக்கொண்டு சென்றனர். நானோ, 'பழுதுபடாத இரத்தினமாக' இருந்த நாட்களில் அவர் பேசியவற்றைப் படித்துக்கொண்டிருந்தேன். அவர்களோ அடுத்து வர இருக்கும் தேர்தலை எண்ணிக்கொண்டு, நேருவை வாழ்த்திக்கொண்டிருந்தனர்.

வழக்குமன்றத்திலே முழக்கம், வாலிபர் மாநாட்டிலே பேச்சு, காங்கிரஸ் மாநாடுகளிலே பேருரை, பத்திரிகை நிருபர்களிடம் விளக்கம், இவ்வண்ணம் வடிவங்கள் பல உள; ஆனால் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்பது, வீரஉணர்ச்சி, செயலாற்ற வேண்டுமென்ற துடிப்பு, இலட்சியம் வெற்றிபெற்றே தீரும் என்ற திடமான நம்பிக்கை, மக்கள் திரண்டெழுந்துவிட்டனர் என்பதைக் கண்டதால் ஏற்பட்ட களிப்பு!

> வாதாடுவதற்காக, நான் வழக்குமன்றத்திலே நிற்கவில்லை! என் நாடு விடுதலை பெறவேண்டும் என்பதற்கு நான் வாதாடவா வேண்டும்!! பொருள் இல்லை அதற்கு.
>
> ஏதேதோ, செக்ஷன்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள், நான் செய்த குற்றங்கள் என்பதாக! நான் ஒரே ஒரு குற்றம்தான் செய்திருக்கிறேன்—தொடர்ந்து செய்துகொண்டு வருவதாகவும் இருக்கிறேன்; என் நாட்டை அந்நியன் பிடியிலிருந்து மீட்பதற்காகப் போராடுவது. அது குற்றம் என்றால், நான் குற்றவாளி! சந்தேகமின்றி!! உங்கள் சட்டப்படி!! ஆனால் அதனை நான் செய்யாதிருந்தால், நான், என் நாட்டுக்கு, மக்களுக்கு, மாபெருந் துரோகியாவேன்! அதனை அறிந்தே அடிமைத்தனத்தை எதிர்க்கும் காரியத்திலே ஈடுபட்டிருக்கிறேன்! சட்டம் அதைக் குற்றம் என்று கூறுகிறதா? கூறட்டும்! நீங்கள் காட்டும், சட்டத்தைவிட, மேலான, சட்டம் ஒன்றுக்கு நான் கட்டுப்பட்டவன்! அது, நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டாகவேண்டிய கடமை.
>
> இங்கு, சட்டங்களை அலசுவார்கள்; ஆராய்வார்கள், மறுப்புகள், குறுக்குக் கேள்விகள் கிளம்பும். அறிவேன். ஆனால், நியாயம் பெற இதுஅல்ல இடம் என்பதை அறிந்திருக்கிறேன். வழக்குமன்றத் தலைவரிடம் மதிப்புக் குறைவு அல்ல—இந்த வழக்கு மன்றம், சட்டம் இவை யாவும், என் நாட்டை அடிமைப்படுத்திவிட்டுள்ள அந்நியனின் கைப்பாவைகள்! எடுபிடிகள்! ஏவலர்கள்! இங்கு, நியாயம் எப்படிக் கிடைக்கும்? எதிர்பார்க்கத்தான் முடியுமா?
>
> தண்டனை தாருங்கள்! தாராளமாக! நீண்டகாலத் தண்டனையாக!! விடுதலைப் போரில் ஈடுபடுபவனுக்கு அதனினும் மேலான பேறு இல்லை; அதனினும் மேலான மகிழ்ச்சி தரவல்லது—ஒரு சமயம், விடுதலைப் போரிலே மடிவது, அல்லது விடுதலை பெறுவது என்பதன்றி—வேறு எதுவாகவும் இருக்கமுடியாதல்லவா?
>
> சிறையில் தள்ளுங்கள் என்னை! என் ஆருயிர்த் தோழர்கள், பெருமதிப்புக் குரியோர், சிறையில் உள்ளனர்; நான் வெளியில் இருக்கிறேன்; இதுதான் தாங்கமுடியாத வேதனை! என்னை, என் தோழர்கள் உள்ள இடத்துக்கு அனுப்புங்கள்!!
>
> இந்த நாடே பெரிய சிறைக்கூடம்! இதிலே உள்ளே சென்றால்தானா சிறை! அளவுதான், பெரிது சிறிது! நிலைமையில் வித்தியாசம் இல்லை! தண்டனைதரக் கூடியுள்ள இடத்தில், வாதாடிக் காலங் கழிப்பானேன்! கொடுப்பதைச் சற்றுக் கடினமானதாகக் கொடுங்கள்!!

தம்பி! வழக்கறிஞர்களிலேயே மிகக் கீர்த்தி வாய்ந்தவர், நிரம்ப வருமானம் உடையவர், வாழ்க்கையில் இன்பம் காண்பவர்; அரண்மனை போன்ற வீட்டை உடையவர்; ஆள் அம்பு ஏராளம்; நிலபுலம் நிறைய; ஊரிலே செல்வாக்கு; இவ்வளவும் பெற்றுத் திகழ்ந்த மோதிலால் நேருவின் திருக்குமாரர், பல ஆண்டுகள் இங்கிலாந்திலே படித்துப் பட்டம் பெற்றவர், இதுபோல, வழக்கு மன்றம் நின்று முழக்கமிடக் கேட்பவர்கள், எழுச்சிப் பிழம்பாகிவிடுவரன்றோ! ஆமாம்! அதற்குத்தானே அவரும் அவ்விதம் பேசினார்—வழக்குமன்றத்தினருக்காகவா அந்தப் பேச்சு — நாட்டு விடுதலை வீரர்களுக்காக!!

நேருபண்டிதர், உலகிலே பல நாடுகள் விடுதலை பெற நடத்திய, வீரக்காதைகளை, காப்பியங்களை நன்கு கற்றுணர்ந்தவர் — விடுதலைப்போர் நடத்தியவர்களில் சிலரைக்கண்டும் பேசியவர் — விடுதலைப்போரிலே வீழ்ந்துபட்டவர்களின் கல்லறையின்மீது, விடுதலை பெற்ற மக்கள், கண்ணீர் சிந்தி அஞ்சலி செலுத்தும், உள்ளமுருக்கும் காட்சிகளைக் கண்டவர்—எனவே, அவருக்கு, வழக்குமன்றத்திலே நிற்கும்போது, தம்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள், சட்டப்புத்தகத்திலே, அவைகளுக்காகத் தரப்பட்டுள்ள விளக்கங்கள், எனும் இவை அல்ல, நிச்சயமாக, விடுதலைக்காகப் பாடுபட்டவர்களின் அணிவகுப்புத்தான் தெரிந்திருக்கும். நான் கண்டேனே, கோலாகலமாகக் கொடி ஏந்திச் சென்றவர்கள், அந்த அணிவகுப்பிலே, மருந்துக்குக்கூட அப்படிப்பட்ட, விடுதலைப்போர்புரிந்த மாண்பினர், கிடையாது! ஆகவேதான், மிக உரத்த குரலிலே முழக்கமெழுப்பினர்! தம்பி! குயிலுக்கு முடிகிறதா, காக்கை போலக் கரைய!! இனிமை என்று எண்ணிக்கொண்டு, வலிவற்ற குரலெழுப்புகிறது! காக்கை அப்படியா! காதைக் குடைந்தெடுத்துவிடுகிறதல்லவா? உள்ளபடி, விடுதலைப்போரிலே ஈடுபட்டுக் களம் நின்று, தாக்குதலுக்கு ஆளாகித் தழும்பேறப் பெற்றவர்கள், அன்று பேசக்கூட இயலாதபடி, கண்கள் களிப்புக் கவிதை பாடிடும் நிலையில் இருப்பர். கட்டித் தங்கம், பூமிக்கடியில்தானே தூங்கிக்கொண்டிருக்கிறது! சிறு தகரத் துண்டுகள், கண்களைப் பறித்துவிடும் விதமான, ஒளி கிளப்பிக்கொண்டல்லவா உள்ளன — வெயில் வேளையில்! கடலுக்கு அடியில் அல்லவாமுத்து உறங்குகிறது! கடலோர மணலில், குவியல் குவியலாக உள்ளவை? வெறும் கிளிஞ்சல்கள்!!

"விடுதலை பெற்றோம், விழி பெற்றோம்'' என்றார் ஓர் பேரறிவாளர்! ஒரு நாட்டின் எழில், ஏற்றம், வளம், வாழ்வு, யாவும், வேற்று நாட்டானிடம் நாடு சிக்கிக் கிடக்கும்போது, மங்கிப்போகிறது. நமது நாடு ஏழை நாடு; வளமற்றது, வாழவைக்கும் வல்லமை பெற்றது அல்ல, என்று நாமே, எண்ணும்விதமான, புத்தித் தடுமாற்றத்தைக் கொடுத்துவிடுகிறது, அடிமைத்தனம்; நாட்டிலே செல்வம் இருக்கும், நாட்டவர் கண்களுக்குத் தெரியாது! வயலில் வளம் இருக்கும், பெற்றிட வழி தெரியாது! நாட்டுக்குப் புகழ்மிக்க வரலாறு இருக்கும், படித்திட வாய்ப்பு இருக்காது! கண்ணுக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும்! நம்மைநாமே ஆண்டுகொள்ள முடியாதவர்கள்—நம்மை ஆள நம்மைவிட வலிவுமிக்கவர்கள், அறிவுமிக்கவர்கள், அனுபவமிக்கவர்கள், வந்திருக்கிறார்கள். எப்படி ஆள்வது என்பது அவர்கட்குத் தெரியும்! ஆளும் பொறுப்பை நாம் அவர்களிடம் விட்டுவிட்டு, ஆடுமாடுகளை மேய்த்திடலாம், காடுமேடு திருத்திடலாம், கைகட்டிப் பிழைத்திடலாம், கடைகண்ணி வைத்திடலாம், கால்வயிற்றுக்குக்கிடைத்தாலும், கந்தா! முருகா! என்று பஜனைசெய்தபடி இருந்து மாயா பந்தம் விடுபட்டு, மகேசன் அடி சேர்ந்துவிடலாம், அது வரையில் இந்தக் 'கட்டை' நடமாடும் இடம் இந்த உலகம்—நாடு—வீடு!—என்று வேதாந்தம் பேசிடுவர் மக்கள்—அடிமைப் பிடியில் இருக்கும் காலை! அவர்கட்கு, விழி இல்லை—நாட்டைக்காண, நல்வழிகாண! அதனால் தான் பேரறிவாளர் சொன்னார், **"விடுதலை பெற்றோம், விழி பெற்றோம்!''** என்று.

ஊர்வலத்திலே சென்றவர்கள் **அந்தவிதமான விழி** பெற்றவர்கள் அல்ல! விடுதலை பெற்றுத் **தந்தவர்களின்** முகாமிலே நமக்கு இடம் கிடைத்துவிட்டது! **அவர்கள்** ஈட்டியுள்ள செல்வாக்கு, நமக்குப் பயன்படவழி கிடைத்துவிட்டது! அவர்கள் பெற்றுள்ள **வடுக்களைக்** காணும் மக்கள், நெஞ்சம் நெக்குருக **நிற்கிறார்கள்!** உமது கட்டளைப்படி நடந்துகொள்கிறோம் **என்று உள்ளம்** உருகிக் கூறுகிறார்கள்! நாடு, மீட்டுத்தந்தவர்களுக்கு, நன்றிகாட்டுவதும், அன்புக் காணிக்கை செலுத்துவதும், நமது தலையாயகடமை என்ற **உணர்வு** கொண்டவர்களாக மக்கள் இருப்பது **அறிந்து, இந்தப்** பொன்னான வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொள்வோம் என்ற நோக்குடன், விடுதலைப்போர் நடாத்தியவர்களின் முகாமுக்கு, தங்கக் கூடாரம் **அமைத்துத்** தருகிறோம், தர்பார் மண்டபம் கட்டிக்கொடுக்கிறோம், வெற்றிவிழா நடத்துகிறோம், விருந்துவைபவம் **ஏற்பாடு** செய்கிறோம், இசை நிகழ்ச்சியும் நாட்டியங்களும் **களிப்** பூட்டும்விதமானவைகளாக இருப்பது எமது **பொறுப்பு,** நீவிர் நடமாடும் பாதையில் நறுமண மலர் **தூவுகிறோம்;** குளித்திடப் பன்னீர்வேண்டுமா? உடுத்திடப் **பட்டுப்** பட்டாடை தேவையா? பூண்டிட, அணிகள் **வேண்டுமா?** கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்! கோலாகலமாக விழா நடத்திக் காட்டுகிறோம்! **கண்டு** களியுங்கள்—காதுகுளிர வாழ்த்துகிறோம், கேட்டு **இன்** புறுங்கள்!—என்றெல்லாம் பேசிப், பாசம்காட்டி, நேசம் பெற்றால், கிடைக்கக்கூடிய, 'பசையும் ருசியும்' **விழி**யில் படுகிறது — மனதிலே ஆசை **அலைமோதுகிறது!** அந்தக் கொந்தளிப்புத்தான், உரத்தகுரல் **முழக்கமாகி**றது! கள்தானே தம்பி! பொங்கி வழிகிறது! **இளநீர்?** அப்படி இல்லையல்லவா? உற்றுப்பார்த்தால் **தெரியும்,** வெண்ணெயைவிடச் சுண்ணும்பு, **பளபளப்பான** வெண்மை நிறம் காட்டுகிறது!

நான் படித்துக்கொண்டிருந்த ஏடு, **பிழைக்கத்** தெரிந்தவர்கள் கட்டித்தழுவி, உச்சிமோந்து முத்தமிட்டுக், கண்ணே! கற்பகமே! கலிதீர்க்கவந்தவனே! என்று கொஞ்சிடும் நிலையைக் காங்கிரஸ் **பெற்ற நாட்**களிலே, பேசப்பட்டவைகளை அல்ல; இது என்ன **வீண்** வேலை! தலைகீழாக நின்றாலும் இவர்களின் **எண்ணம்** ஈடேறாதே! உயர உயரப் பறந்தாலும் **ஊர்க்குருவி பருந்**தாகுமா? வீணாக உதைபட்டுச் சாகிறார்கள்! **பிடிபட்டு** வதைபடுகிறார்கள்! ஆற்றல் இல்லாமலா, அவ்வளவு தொலைவிலிருந்து, இங்குவந்து, நம்மை **அடக்கி ஆள** முடிகிறது, வெள்ளையரால்! படைகொண்ட **முடிமன்னர்**களெல்லாம், அவனைப் பகைத்துக்கொண்டு, **பொடிப்** பொடியாகிப் போயினர்! **கோட்டைகளெல்லாம் தரை**மட்டமாகிவிட்டன; புல்முளைத்துவிட்டன! **தோள்வலி**யும் வாள்வலியும் **கொண்டோர்யாம்! தொடுத்திடு**வோம் கணைகள் பல, எதிரிகள் சிரம் **கொய்திட! என்று** வீரம் பேசியோரெல்லாம், **வீழ்ந்தடித்து ஓடினார்கள்,** அவன் **'வேட்டு'க் கிளப்பியதும். கொச்சி திருவிதாங்**கூரும், கோலமிகு மைசூரும், **ஹைதராபாத்தோடு,** அழகுமிகு **ஜெய்ப்பூரும், போபாலும் பிகானிரும், போர்ப்** புலிகள் நிரம்பிய பேரரசாம் **மராட்டியமும், விருதுப்**

பெயர்களேயே விண்முட்டும் அளவுபெற்ற எத்தனேயோ அரசுகளும், எதைக்காட்டிவருவனவாம்? எதிர்த்தார் பிழைத்ததில்லே, தொழுதார் வாழ்ந்திடலாம், எனும் நிலேயை யன்றே! களம் நின்று கடும்போரிட்டு, வெற்றி பல பெற்று, வீர மரபினர் என விருதுபெற்றவர்கள் வீழ்ந்துபட்டனர்; இவர்கள் மேடை அதிரப்பேசிக் காணப்போவது என்ன? சிறை! சித்திரவதை! தூக்கு மேடை! இவைதாமே! இஃது அறியாமல், சுயராஜ்யம் எமது பிறப்புரிமை என்று சுலோகம் பாடுகிருர்களே!! பாய்ந்துவரும் வெள்ளத்தில் படகேறிச் செல்வதோ? சீறிவரும் வேங்கையைச் சிறுகோலால் தாக்குவதோ? விரண்டோர் வேழம்வந்தால், தடம்படுத்துத் தடுப்பதோ? கடற்போரில் வல்லவர்கள்—தரைப்படையில் மிக்கவர் கள் — தந்திரம் அறிந்தவர்கள் — போர்யந்திரம் வைத் துள்ளவர்கள்! இவர்களே எதிர்த்து நிற்க இயலுமோ எவராலும்?—என்றெல்லாம், பரிதாபம் காட்டியும், பரி காசம் பேசியும், பாமரர் மட்டுமல்ல, படித்தோரும், துச்சமெனக் காங்கிரசைக் கருதிய நாட்களில், அதன் சார்பில் நின்று, பண்டிதர் பேசிய பேருரைகள்கொண்ட ஏடு, நான் படித்தது.

இன்று பண்டித நேருவின் ஒரு சொல், சிலரைக் கோடிக்கணக்கான பணம் பெறவைக்கும் ஆற்றல் படைத்தது. எடுத்துக்காட்டுக்கு, இனி எவரும் அரிசிச் சாதம் சாப்பிடக்கூடாது என்று அவர் கட்டளே யிட்டால், கோதுமை மண்டலத்து வணிகக் கோட்டம் கோடீஸ்வரர்கள் கொலுவிருக்கும் இடமாகிவிடும்.

அன்று பண்டிதரின் பேச்சு, எத்தனேயோ இளேஞர் களே இன்ப வாழ்வை இழந்துவிடச் செய்தது.

அந்த நாள் நேரு, அடிமைத்தனத்தைப் போக்கிக் கொள்ளும் ஆற்றல் பெறவேண்டும் என்பதற்காக எடுத்துக்காட்டிய காரணங்களே, அவர் வீர உணர்ச்சி பொங்கிடத்தக்க விதத்தில் விளக்கிய வகையைப் படித் துக்கொண்டிருந்தபோது—காங்கிரஸ் நண்பர்கள் திடுக் கிடக்கூடாது—நாம் மேற்கொண்டுள்ள காரியத்திலே எனக்கு முன்னிலும் பன்மடங்கு ஆர்வம் வளர்ந்தது!

"எவ்வளவு பெரிய தலேவர் எமது நேரு! எத்துணே வீர உரைகள் ஆற்றியவர்! அணி வகுப்புகள் நடாத்தி யவர்! ஆங்கில ஏகாதிபத்தியத்தை அதிர அடித்தவர்! சிறைக்கஞ்சாச் சிங்கம்! என்பதை அவர்பற்றிய ஏடு படித்துத் தெளிவாக அறிந்துகொண்ட பிறகுமா, உனக்கு, அவரை எதிர்த்துக், கிளர்ச்சி நடத்தத் தோன்றுகிறது! பித்தமோ உனக்கு! உலக வல்லரசு களிலே முன்னணி உள்ளது பிரிட்டன். அந்தப் பேரரசே, எமது நேருவின் வீரத்தின் முன்பு தலேகாட்ட முடியாமல் ஓடோடிச் சென்றுவிட்டது. பேதையே! அதை எல்லாம் படித்தேன் என்றும் பேசுகிருய். வீரம் கொந்தளிக்கும் பேச்சு என்கிருய்! சொல்லிவிட்டு, நீ கிளம்புகிருய், முனேபோன கத்தியும், மூளியான கேடய மும் தூக்கிக்கொண்டு, புண்ணுன உடல் கொண் டோன், கண்போன குதிரை ஏறிக் களம் செல்லும் கதைபோல; நீ எதிர்க்கிருய், எமது நேரு அரசை!! அதைப் படித்தேன் இதைப் படித்தேன் என்று கூறு கிருய்; அறிவு பெருமல், எதைப் படித்துத்தான் என்ன பலன்? நேரு பண்டிதரின் அருமை பெருமை அறியா மல், அவராற்றிய அருஞ்செயல்கள் தெரியாமல், அவரை எதிர்க்கக் கிளம்பிளுல், அப்படிப்பட்டவனே, 'அவன் அறியமாட்டான், அந்த அஞ்சா நெஞ்சுடை ஆற்றலரசின் வீரத்தை,' என்று எண்ணிப், பரிதாபப் படலாம். நீயோ, அதை நான் அறிந்திருக்கிறேன் என்கிருய்—அறிந்தும் எதிர்க்கத் துணிகிருயே! இது ஏமாளித்தனம் மட்டுமல்லவே — முழுக்க முழுக்க முட் டாள்தனமல்லவா?—என்று காங்கிரசாருக்குக் கேட்கத் தோன்றும். சிலர் இதுபோலப் பேசவும் செய்கிருர் கள். பாடக்கூடச் செய்கிருர்கள்.

பாவம், அவர்கள், பண்டித நேருவின் வல்லமைக்கு நாம் அறைகூவல் விடுவதாக எண்ணிக்கொண்டு அங்கலாய்த்துக்கொள்கிருர்கள்.

அவர்கள், பண்டித நேருவின் வலிவை மட்டுமே நம்பிப் பிழைத்துத் தீரவேண்டியவர்களாக இருப்பதால், அவருடைய வல்லமையை எவரேனும் மதிக்காவிட்டால் மருளுகிருர்கள்—எதிர்க்கத் துணிந்தால், திகைக் கிருர்கள்.

தம்பி! மிகப் பழங்காலத்தில் அல்ல, இரண்டொரு நூற்ருண்டுக்கு முன்பு வரையில்கூட, ஐரோப்பாக் கண் டத்து நாடுகளில், காதல் விவகாரச் சண்டையிலிருந்து, நாட்டுப் பிரச்சினே பற்றி எழும் சச்சரவு வரையில், ஒருவருக்கொருவர், வாட்போர் புரிந்துகொள்வதன்மூலம் தீர்த்துக்கொள்வார்கள். அது மிகவும் போற்றப்பட்டு வந்த முறையாகவும் கொள்ளப்பட்டது. சில நாடுகளில் அந்த முறையைத் தடுக்கச் சட்டம் இயற்றினர்; இயற் றியும், அந்த முறையைச் சிலர் துணிந்து மேற் கொண்டனர்.

அதுபோன்றது அல்ல, இன்று, நடைபெறும் விடுதலேப் போராட்டங்கள்.

எனவே, இதிலே, தனி மனிதர்களின் தாக்கும் சக்தி, தாங்கும் சக்தி, போர்த் திறமை போர்க் கருவி கள், என்பவைகளுக்கு இடமில்லே.

எவர் கருத்துக்கு மக்களிடம் ஆதரவு திரண்டு வருகிறது; மக்கள் எவர் பக்கம் தீர்ப்பளிக்கிருர்கள் என்பதுதான், இதிலுள்ள பிரச்சினே.

இதனே அறியாமல், சில காங்கிரசார், எமது நேருவையா எதிர்க்கிருய்? என்று எக்காளமிட்டுத் தமது குறை அறிவைக் கொட்டிக் காட்டுகிருர்கள். என் ஆழ்ந்த அனுதாபம் அவர்கட்கு.

நமது போராட்டம், ஒரு முறையை எதிர்த்து; நேரு பண்டிதரை எதிர்த்து அல்ல.

நேரு பண்டிதர் தமது ஆற்றலே, எந்த முறைக்குப் பக்கபலமாக்கிக் காப்பாற்றி வருகிருரோ, அந்த முறை மீது நமக்கு வெறுப்பு; அதைக் கண்டிக்கிரும்; எதிர்க் கிரும்; கிளர்ச்சி நடாத்துகிரும்; நேரு பண்டிதரெனும் தனி மனிதரிடம், மதிப்புக் குறைவுமில்லே; அவரை மட்ட மாக மதிப்பிட நாம் மதியிலியும் அல்ல. மாருக, நேரு **பண்டிதரின், விடுதலே ஆர்வம், நமக்கு அவரிடம் பெரு மதிப்பை ஏற்படுத்துகிறது; ஆனல், அதனினும் அதிக அளவு மதிப்பு, விடுதலே ஆர்வத்தின்மீது ஏற்படுகிறது!**

அவர் காட்டிய ஆர்வம், கொண்ட உறுதி, ஊட்டிய வீரம், பட்ட கஷ்ட நஷ்டம், ஏற்றுக்கொண்ட தியாகம், ஈடுகொடுத்த இன்னல்கள், எதிர்நீச்சலிட்டது, எதிர்ப்புக் கஞ்சாமை, சிறையில் வாடியது, சித்திரவதைக்கும் அஞ்சாமல் நின்றது, அணி திரட்டியது, பாசறை அமைத்தது, படை நடாத்தியது, — இவைகளை, நான் தொகுப்பு நூலில் படித்தபோது, இப்படிப்பட்ட நேரு அல்லவா, திராவிடத்தை அடக்கிவைத்திருக்கிறார், என்ற திகைப்பு அல்ல; இப்படி அல்லவா, விடுதலைக்குப் பாடுபடவேண்டும்! இவர்போலல்லவா ஓய்வின்றி உழைக்கவேண்டும்! இவர் பேச்சிலல்லவா, விடுதலையின் ஆர்வம் மேலும் விளக்கமாகிறது! இவரே இவ்வளவு இன்னலை ஏற்றுக்கொண்டாரென்றால், நாம் காணும் இன்னல், மிகச் சாதாரணமன்றோ! இவரே இத்துணை காலம், பலப்பல பாடுபட்டுச், சோர்வு சில வேளை, துயரம் பல நேரம், தோல்வி துளைத்திடும் நிலை சில சமயம், எனும் பல்வேறு நிலைகளைக் கண்டு, மனம் உடையாமல் நின்று, தொடர்ந்து பணியாற்றித்தான், வெற்றி கண்டாரென்றால், நாம், இதனைவிட அதிகமான அளவல்லவா பாடுபட்டாக வேண்டும்—என்ற எண்ணம்தான் எனக்கு ஏற்பட்டது.

புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்டதாம்! கான மயிலாடக் கண்ட வான்கோழியும் சிறகு விரித்ததாம் ஆட! அதுபோல இந்த அண்ணாத்துரை, நேருவின் பேராற்றலையும், வீரதீரச்செயலையும் ஏட்டிலே படித்தானும், உடனே தானும் அதுபோலச் செய்யப் போவதாகப் பிதற்றுகிறான்! என்னே இவன் பேதைமை! —என்று பேசுவர், காங்கிரசார். எளிதாகப் பேச இயலும்; பேசும்போது, சுவையாகவும் இருக்கும்,' தேர்தல் நெருங்கி வருகிறதல்லவா, அதனால், பயனும் கிடைக்கும். பெற்று இன்புறட்டும். எனக்கு நட்டமில்லை.

ஆனால், இன்று நம்மைப்பற்றி இவர்கள் இதுபோல ஏளனம் பேசுகிறார்களே, தம்பி! இதேபோலத்தான், நேரு உள்ளிட்ட காங்கிரசார் விடுதலைக் கிளர்ச்சி நடாத்தியபோது, பிரிட்டனில் இருந்த ஆணவக்காரர்கள், அயர்லாந்து நாட்டிலே, டிவேலரா கட்சியினர் நடத்திய போராட்ட முறைகளை ஏடுகளிலே படித்து விட்டு, இந்தக் 'கைராட்டைகள்' ஆட்டம் போடுகின்றனர்! பட்டினி கிடத்தலிலேயிருந்து கோர்ட்டை அவமதிப்பது வரையில், ஐயர்லாந்து முறையின் மறுபதிப்பு! சொந்தப் புத்தி துளியும் கிடையாது. இவர்களுக்கென ஒரு தனி முறையும் இல்லை! எல்லாம் இரவல் சரக்கு! எளிய வாழ்க்கை, ஏழையுடன் ஏழையாக இருப்பது, தன் துணியைத் தானே துவைத்துக் கொள்வது, எனும் காந்தி முறைகூட, ரஷியநாட்டு டால்ஸ்டாய் தத்துவம்; அவர் சொல்லிக் கொடுத்த பாடம்!'' என்று பேசினர்; ஏளனம் செய்தனர்.

முன்ஏர் போனபடி பின்ஏர் போகிறது—என்பார்கள் அல்லவா? அதுபோல, முன்பு, வெள்ளை வெறியர் பேசியதை இன்று காங்கிரஸ் கண்ணியவான்கள் பேசுகின்றனர். இதைப் புரிந்துகொண்டால், தம்பி! நமக்குக் காங்கிரசாரிடம் கோபம் எழாது; மாறாக, அவர்களே உணரும் வண்ணம், நாம் நமது இலட்சியத்துக்காகப் பாடுபடவேண்டும்; இன்னல்கள் அடுக்கடுக்காக வந்தாலும், தளரக்கூடாது; இன்னுயிர் போவதேனும் இலட்சியத்தை இழக்கக்கூடாது என்ற உறுதியை, எழுச்சியைப் பெறவேண்டும் என்று தோன்றும். தரவேண்டிய விலைகொடுத்துப், பெறவேண்டிய விடுதலையைப் பெற்றுக் காட்டினால், இன்று ஏசுவோரின் கண்ணீர் நம்மை வாழ்த்தும் நிலையில், வழியும்!

ஊர்வலம் போகிறார்கள், பாவம், பெரும்பாலானவர்கள், விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபடாதவர்கள்.

உடன் வரும் போலீஸ் அதிகாரிகளைக் காணும் போதே அவர்களுக்கு, பெருமை, பூரிப்பு! மார்பை நிமிர்த்தி நடக்கிறார்கள்!,

முன்பு? ஓடஓட அடித்து விரட்டினார்களே போலீசார்—அந்த நாட்களில்; இதோ இன்று ஊர்வலத்திலே கலந்துகொள்ளும் 'பிரமுகர்கள்' — வெள்ளைக்கார அதிகாரிகளுக்குத் தோட்டக் கச்சேரி நடத்திக்கொண்டும், "வேலை வெட்டி இல்லாததுகள்! விவரமறியாததுகள்! நத்தம் புறம்போக்கு! நாலணா எட்டணா!'' என்றெல்லாம், காங்கிரஸ் தொண்டர்களை ஏசிக்கொண்டும் இருந்தவர்கள். இவர்கள், 'விடுதலை விழா' கொண்டாடும் குழுவினராகிவிட்டனர்! இவர்களைக்கொண்டு 'விடுதலை விழா' நடாத்திக்கொள்வதிலே, உண்மைக் காங்கிரஸ் தொண்டர்கள். வேதனைப்படுவர், வெட்கப்படுவர்! ஆனால், அத்தகைய உண்மைக் காங்கிரஸ் தொண்டர்கள், பலபேர், இன்று இல்லை; மறைந்து போயினர்; பலர் வேறு வேறு கட்சியினராயினர்; இன்னும் சிலர், இந்தத் தலைகீழ் மாற்றம் கண்டு, திகைத்துப்போயுள்ளனர்; பேசவும் இயலாதவராக!

பர்தோலி வரிகொடா இயக்கம்! சபர்மதி ஆசிரமம்! நவகாளி யாத்திரை! சௌரி சௌரா! சம்பரான்!—இவைகளுடன் பின்னிக் கிடக்கும் எழுச்சிமிகு நிகழ்ச்சிகளை அறியாதவர் தொகையே ஏராளம்—நான் கண்ட ஊர்வலத்தில் மட்டுமல்ல—தம்பி! ஒவ்வோர் இடத்து ஊர்வலத்திலும்—மொத்தத்திலே இன்றுள்ள காங்கிரசிலே!

காளிங்கமர்த்தனம்! கம்சவதம்! சிசுபால சம்ஹாரம்! கோவர்த்தனத்தைக் குடைபிடித்தது! — என்பவைகளைக் 'கிருஷ்ண லீலா' காலட்சேபத்திலோ, கூத்திலோ மட்டுமே தெரிந்துகொள்கிறார்களல்லவா,மக்கள். ஆனால்,அதற்காகக், கிருஷ்ணன், கண்ணன், கோபாலன் எனும் பெயருடையார்களை அழைத்து வெண்ணெய் தருவார்களா!! அதுபோலத்தான். பர்தோலி, சபர்மதி, சம்பரான், நவ்காளி என்பவைகளைப் பற்றி, நான் குத்திக் குத்திக் காட்டுவதால் மாணம் பொத்துக்கொண்டு வருகிற நிலையில் சிலர் பேசினாலும், அதற்காக, இன்றுள்ள காங்கிரசாருக்கு ஆதரவு காட்டமாட்டார்கள்—அந்தக் காரணத்துக்காக!

பர்மிட் பெறத் துணை நின்றார்! பஸ் ரூட் வாங்கிக் கொடுத்தார்! பஞ்ச நிவாரணக் கடை கிடைக்கச் செய்தார்! ஏரி மராமத்துக் காண்ட்ராக்ட் எடுத்துக் கொடுத்தார்! பால் பவுடர் தந்தார்! மந்திரி பக்கத்தில் உட்கார வைத்தார்! பெரியப்பாவிடம் உயிர்! பெரியதனக்காரருக்கு நண்பர்! சத்திரம் ஆறு! சமாராதனை வருடா வருடம்! ஜாதியில் பெரியவர்! ஊரில் பாதி அவருடையது! கடன் கொடுப்பவர் அவரேதான்! கலெக்டர்

மகனுக்குப் பெண் தந்தார்!—எனும் இப்படி ஏதாகிலும் காரணங்களுக்காகப், பெரும்பாலான காங்கிரசாருக்கு, ஆதரவு—தேர்தல் காலத்தில் — தரப்படுகிறதேயன்றி, இவர்கள், விடுதலை வாங்கித் தந்தவர்கள்! வீரதீரச் செயலாற்றியவர்கள்! என்று எண்ணி அல்ல. மக்கள், இத்தனை விவரமாகப் பேசமாட்டார்களேதவிர, அவர்கள் விவரம் அறியாதவர்கள் அல்ல!!

ஊர்வலம் செல்வோர், தவறான எண்ணம் கொண்டுள்ளனர்—இவர்களை விடுதலைப்போர் நடாத்திய வெற்றி வீரர்கள் என்று நாம் எண்ணி ஏமாறுவோம் என்று எதிர்பார்க்கிறார்கள்; அத்துடன், இத்தகைய வெற்றி வீரர்களை எதிர்த்து நின்று, நாம் நமது இலட்சியத்தை அடையமுடியாது என்ற அச்சம் நம்மைப் பிடித்து உலுக்கும் என்றும் எண்ணுகிறார்கள்.

இவர்களை, நாம், விடுதலை பெற்றுத்தந்த வீரர்கள் என்று எண்ணி ஏமாறமாட்டோம்—விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட நாம், காங்கிரஸ் நடத்திய விடுதலைக் கிளர்ச்சிபற்றிய வரலாற்றினைக், காங்கிரசில் ஒட்டிக் கொண்டுவிட்ட இவர்களைப்போல அல்லாமல், தெளிவாகப் படித்துப் பாடம் பெற்றிருக்கிறோம். மாட்டின் கழுத்திலே கட்டப்பட்ட மணியைக்கொண்டு, மாட்டின்விலையை மதிக்கமாட்டார்கள்; அந்நிலையில், மாட்டின் கழுத்து மடிப்பில் ஒட்டிக்கொண்டு கிடக்கும் 'உணி'யைக் காட்டி, பத்து ரூபாய் சேர்த்துக் கொடு என்று மாட்டுக்குடையான் கேட்டால், கைகொட்டியல்லவா நகைப்பார்கள்! அதுபோலக், காங்கிரசுக்குக் கிடைத்துள்ள பதவியைக் கண்டே, மயங்க மறுக்கும்போது, ஒட்டிக்கொண்டுள்ள உணி போல, ஆளும் கட்சியாகக் காங்கிரஸ் மாறின பிறகு, அதிலே குடிபுகுந்தகுணாளர்களைக் கண்டா, மருளப்போகிறோம்? அவர்களுக்குப் பாபம், அப்படி ஒரு நினைப்பு!

இவர்களின் நினைப்பு இதுவென்றால், விடுதலைக் கிளர்ச்சி நடாத்திய அனுபவம் பெற்ற காங்கிரஸ் தலைவர்களோ தங்களோடு, வீரர் வரிசையே தீர்ந்து போய்விட்டது! ஆற்றலின் கடைசிச் சொட்டும் தீர்ந்து போய் விட்டது! விடுதலைக் கிளர்ச்சி என இனி ஒன்று தலைதூக்காது! தலைதூக்கவேண்டிய அவசியமே இல்லை! எவராலும் முடியாது! எவருக்கும் இல்லை அந்தஆற்றல்! —என்று திடமாக—மிகத்திடமாக நம்புகிறார்கள்.

அவ்வளவு நல்லவர்கள் இவ்வளவு பொல்லாங்கான எண்ணம் கொண்டிருப்பதைக் காணும்போதுதான், நமக்குக் கோபத்துடன் வருத்தமும் பிணைந்து வாட்டுகிறது.

காங்கிரசின் தொண்டர்கள், துணைநாடி வந்துற்ற பிணிபோன்றார், எப்படி, "எமது நேரு பண்டிதரையா எதிர்க்கத்துணிகிறாய்?" என்று கடுங்கோபம் கொண்டு கேட்கிறார்களோ, அதுபோன்றே, விடுதலைக்குப் பாடு பட்டவர்கள், விடுதலையின் அருமை அறிந்தவர்கள், விடுதலை உணர்ச்சி பெற்றுவிட்டவர்கள் எங்ஙனம் எதற்கும் துணிந்தவராவர் என்பதனைத் தெரிந்தவர்கள், எனும் வரிசையில் வைத்து எண்ணப்படவேண்டியவர்களும், "இதுகளா! நம்மையா! விடுதலையா! போரா!"—என்று கேலி பேசுகிறார்கள். அதைக் காணும்போதுதான், தம்பி! உள்ளபடி இவர்கள், தமது தத்துவங்களைத் தாமே இகழ்கிறார்களே! இன்றைய நடவடிக்கையால், முன்னாள் செயலால் கிடைக்கும் பெருமைகளுக்கும் இழுக்குத்தேடிக் கொள்கிறார்களே! என்று பரிதாபமாக இருக்கிறது.

வெள்ளையரை, நேரு போன்றார் எதிர்த்தபோது, அவர்களிடம் இருந்துவந்த, ஆயுதம் என்ன? திடமான நம்பிக்கை, அசைக்கமுடியாத ஆர்வம்! எதையும் தாங்கும் உள்ளம்! வேறு உண்டா? சொத்து நிரம்ப இருந்தது அவர்களிடம் —நம்மைப்போல நடுத்தெரு நாராயணர்கள் அல்ல, அந்த நாள் காங்கிரசார்! இன்று காங்கிரசார் ஆகிவிட்டவர்கள்போல, ஊரை அடித்து உலையிலே போடவேண்டிய நிலையினரும் அல்ல. பூர்வீகச் சொத்து! நல்ல வருவாய்! சமுகத்திலே மேலிடம்! படிப்பு! பதவி!—எல்லாம் இருந்தது.

தம்பி! என்றாவது ஒரு நாள், முதன் முதல் காங்கிரசை நடத்த முன்வந்தவர்கள் எவரெவர், அவர்களின் செல்வநிலை, சமுகநிலை என்ன என்பதோடு, வெட்ட வெளியில் கொட்டும் மழையில் கூடி, தி. மு. கழகம் துவக்கினோமே, அவர்களுடைய நிலையுடன் ஒப்பிட்டுப் பார், உனக்கே வியப்பாக இருக்கும்! நாமா, இப்படி ஒரு இயக்கத்தைக் கட்டிக்காப்பாற்றி வரமுடிகிறது, என்று.

செல்வமும் செல்வாக்கும், படிப்பும் பதவியும், சமுகத்தில் உயர்நிலையும் இருந்தன என்றாலும், வெள்ளையரிடம் இருந்து வந்த அதிகார பலம் — ஆள் பலம்— ஆகியவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவை மிக வலிவற்றவை!! எனினும் துணிந்து எதிர்த்து நின்றார்கள்—திட நம்பிக்கையுடன்—வெற்றி நாடி வந்தது.

இந்தப் பாடம், அந்த விடுதலை வரலாறு படிக்கும் போது மிகத் தெளிவாக, நமக்குப் புரிகிறது; ஆனால், அந்த வரலாற்றுக்கு உரியவர்களென்று தம்மைக் கூறிக்கொள்பவர்களோ, நாம் ஈடுபட்டுள்ள 'விடுதலைக் கிளர்ச்சியைத் துச்சமென்று எண்ணுகிறார்கள். ஏன், தம்பி, இது? சொன்னால் கோபித்துக்கொள்ள மாட்டாயே? அவர்கள், நமது உறுதியைச் சந்தேகிக்கிறார்கள்!! ஆமாம்! முழக்கமெழுப்புகிறாய், திராவிடநாடு திராவிடருக்கே, என்று; ஆனால், கொள்கையிலே உறுதி இருக்கும், கொள்கைக்காக எதையும் இழக்கச் சம்மதிப்பர், எத்துணை இன்னல்களையும் ஏற்றுக்கொள்வர், என்று நான் சொல்வதை, அவர்கள், நம்ப மறுக்கிறார்கள்! விளைவு தெரியாமல் வீம்பு பேசுகிறார்கள்! கனவு காண்கிறார்கள்! கவைக்குதவாதன பேசுகிறார்கள்! பேச்சுக் கச்சேரி நடத்துகிறார்கள்! எதிர்ப்புக் கண்டால் இருக்குமிடம் தெரியாமல் ஓடிவிடுவார்கள்! பிடி! அடி! சுடு! என்று உத்தரவு பிறப்பித்தால்போதும், காலடி வீழ்ந்து கதறுவார்கள்! அவர்கள் சுகவாழ்வு விரும்புபவர்கள்! தாமுண்டு, தம்குடும்பம் உண்டு என்று இருப்பவர்கள்! தொழில் செய்யவேண்டும், நிம்மதியாக வாழவேண்டும் என்று எண்ணுபவர்கள்! பொழுதுபோக்கு அரசியல் நடத்துகிறார்கள்! வீரமோ தீரமோ அற்றவர்கள்! வெஞ்சமர் காண அஞ்சுவர்! கொடுஞ் சிறை எனின் ஒளிவர்! கோலோச்சுவோரின் கோபப்பார்வை பட்டால் கருகிச் சாம்பலாவர்!-என்று எண்ணுகிறார்கள்.

உன்னை இகழ்கிறார்கள்; உன் வீரத்தைப் பழிக்கிறார்கள்; உறுதியைச் சந்தேகிக்கிறார்கள்.

என்மீது கோபித்துக்கொள்ளாதே, தம்பி! எனக்கு இல்லை, அவ்விதமான சந்தேகம். நான் நம்புகிறேன்—பரிபூரணமாக நம்புகிறேன். நான் நம்பிக்கை கொள்ள வேறு என்ன இருக்கிறது! என் எண்ணமல்ல, மேலே சொன்னது. உன்னையும் என்னையும் சேர்த்து, முன்பு விடுதலைக் கிளர்ச்சி நடத்திய காங்கிரசார், சந்தேகிக்கிறார்கள். இவர்களுக்கு, ஒரு விடுதலை இயக்கத்தை நடத்தத்தக்க வீரம் கிடையாது; அதற்கேற்ற தியாகம் புரியும் ஆற்றல் கிடையாது; இலட்சியத்திலேயே அசைக்க முடியாத நம்பிக்கை கிடையாது—என்று எண்ணுகிறார்கள்.

நம்முடைய முயற்சிகளை அவர்கள் கேவலமாகக் கருதி ஏளனம் பேசுவதற்குக் காரணம் இதுதான். நான் உள்ளதை உள்ளபடி உரைத்துவிட்டேன்.

மற்றொன்று, தம்பி! நாம் கொள்கையிலே உறுதி கொண்டவர்கள்தானா, எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள்தானா, எதிர்ப்புக்கு அஞ்சாதவர்கள் தானா, என்பதுபற்றிய, சந்தேகம், அவர்களுக்கு எப்படி ஏற்பட்டது, தெரிகிறதா? அதையும், நான் மறைக்க விரும்பவில்லை. இரண்டு நிலைமைகள் இதற்குக் காரணம்.

ஒன்று, நம்மிலே மிக முக்கியமானவர்கள் என்ற நிலையினர், நம்மைக் காட்டிலும், அடித்துப் பேசிக் கொள்கை பரப்பியோர், அமைச்சர்களை அறைகூவி அழைத்தும், எதிர்ப்பாளர்களை ஏசிப்பாடியும் இழிமொழியால் தாக்கியும் வந்தவர்கள், திடீரெனத், திராவிட நாடு கிடைக்காது; விட்டுவிட்டோம்; விட்டுவிடுக! இல்லையேல் கெட்டுவிடுவீர்கள்! நீங்களாகக் கெடாவிட்டால், நாங்கள் எதிர்த்துக் கெடுத்துவிடுவோம் என்றெல்லாம் பேசிடும் கோலம் கண்டதால், காங்கிரஸ் தலைவர்களிலே சிலருக்கு ஒரு நம்பிக்கை—இதுபோலத்தான் மற்றவர்களும், திராவிட நாடு கொள்கையை விட்டு விடுவார்கள்; இவர்களுக்கு என்றைக்குமே அந்தக் கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கை இருந்ததில்லை; எந்தக் கொள்கையிலும் நம்பிக்கை கொள்ளக்கூடியவர்களே அல்ல, இவர்கள், என்று எண்ணுகிறார்கள்.

மற்றொன்று, நமது தோழர்களுக்கிடையே, அலுவலர்களாகப் பணியாற்றும் வகையிலே, எழும் கசப்புகள், பேதங்கள், இவைகளைக்காணும்போது, காங்கிரஸ் தலைவர்கள் களிப்புடன், பேசிக்கொள்கிறார்கள், "பயல்கள் அடித்துக்கொண்டு மடியப்போகிறதுகள். கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கை இருந்தால், அதற்காக உயிரையும் கொடுக்கவேண்டுமென்ற உறுதி இருந்தால், இப்படியா, சில்லறை விஷயங்களுக்கெல்லாம் சிண்டுபிடிசண்டை நடக்கும். கொள்கையாவது மண்ணாவது! காட்டுக்கூச்சலோடு சரி! காரியமாற்றும் திறம் ஏது! கொள்கையிலே நம்பிக்கை இருந்தால் தானே!'' என்று பேசிக்கொள்கிறார்கள்.

தம்பி! இந்த நிலைமை வளரும், பேதமும் பிளவும் அதிகமாகும், கழகம் கலகலத்துப்போகும் என்று காங்கிரஸ் தலைவர்கள் நம்புகிறார்கள்.

நம்மிடையே தோன்றிவிடும் சிலபல செயல்கள், அந்தத் தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கையை வளரச் செய்கிறது!

என்ன செய்வான் இந்த அண்ணாத்துரை! தடுத்துப் பார்க்கிறான்—மறுத்துப்பார்க்கிறான்—நிலைமை சீர்படாவிட்டால், என்ன செய்வான்? விட்டு விட்டு ஓடிவிடுவான்! பார்! பார்! நடக்கப்போவதை!! — என்று காங்கிரஸ் தலைவர்கள் சிலர் பேசுவதுகூட எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கொள்கையை விட்டுவிட்டுச் சிலர் போய்விட்டதும், கொள்கைக்காகக் கழகமே தவிர, நமது உரிமைகளுக்காக, பெருமைகளுக்காக இலாபத்துக்காக, அல்லது, அதை யாரோ பெற்றுவிடுகிறார்களோ என்று மோப்பம்பிடித்து முணுமுணுப்பதற்காக அல்ல, என்பதை முற்றிலும் உணராததால் மூண்டுவிடும் சச்சரவுகளும் காங்கிரஸ் தலைவர்களை, மொத்தத்தில் நமது கழகத்தவருக்கே, கொள்கையிலே நம்பிக்கை இல்லை, என்ற எண்ணம்கொண்டு பேசச்செய்கிறது.

நான், தம்பி! அவர்களின் தீர்ப்பும் வாதமும் சரியென்று கூறவில்லை.

அவர்கள் அவ்விதம் எண்ணவும், பேசவும், நம்முடைய, நடவடிக்கைகள் சில இடம்கொடுத்துவிடுகின்றன என்பதைத்தான் கூறுகிறேன்.

எனக்கும் தெரியும் உனக்கும் தெரியும், ஊரறியும் உலகறியும், காங்கிரஸ் கட்சிக்குள்ளே, மூளைத்து வெடித்து, முடைநாற்றம் வீசிக்கொண்டிருக்கும் சச்சரவுகள்.

அமைச்சரவை அமைக்கப்பட்ட ஏழுதிங்களுக்குள், இரண்டாவது முறையாக, குப்தா அமைச்சர் அவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்! பண்டித நேருவின் சொந்த இராஜ்யத்தில்!

குப்தா அமைத்திருப்பது காங்கிரஸ் மந்திரிசபை.

அதற்கு எதிர்ப்புக்கிளம்புவது, முன்னாள் முதலமைச்சர் சம்பூரணானந்தாவின் ஆதரவாளர்களாக உள்ள காங்கிரஸ் எம். எல். ஏ-க்களிடமிருந்து!

அதனை அவர்கள் திரைமறைவில்கூடச் செய்ய வில்லை. சம்பூரணானந்தாவின் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த கமலாபதிதிருபதி என்பவர் இல்லத்தில் கூடியே பேசுகிறார்கள் — பத்திரிகைகளில் வெளிவரு கின்றன.

அந்த மாநிலத்திலேயே வெளிவரும், இந்தி—உருது—பத்திரிகைகளிலே, பார்த்தால்தான், தெரியும், குப்தா கோஷ்டியின் குட்டுகளை உடைக்கிறேன் என்று ஒருபத்திரிகையும், சம்பூர்ணானந்தாவின் செல்வாக்குக் குச் சமாதிகட்டுகிறேன் என்று மற்றோர் பத்திரிகையும், நாராச நடையில், எழுதித்தீர்த்துக்கொள்ளும் விந்தை!

இங்கு நமக்கு வருகிற சேதி, குப்தா அமைச்சர் அவைமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வருகிறது, என்ற அளவுதான். அங்கு உள்ள நிலைமையிலே, இது நூற்றில் ஒருபகுதி.

ஒவ்வொரு நாளும், இருபிரிவுக் காங்கிரசாரும் முகாம்களில் கூடிப்பேசுவதும், கலகமூட்டுவோர், கலாம் விளைவிப்போர், கைக்கூலி பெறுவோர், கபட நாடகமாடுவோர், கூடிக் குடிகெடுப்போர், மிரட்டிச் சலுகை பெறுவோர், என்பவர்கள் மும்முரமாக வேலை செய்வதும், இவரைப்பற்றிய ஒரு இரகசியம் என் உள் ளங்கையிலே இருக்கிறது என்று ஒருவரும்; அவர் விஷயமாக எனக்குத் தெரிந்ததை அவிழ்த்துவிட்டால், ஊர் நாறும் என்று இன்னொருவர் பேசுவதும்; இதை நீங்களே வெளியே பேசிக்கொண்டு இருக்கக்கூடாது; ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்கள்; ஆகையினால், மாற்றுக்கட்சிக்காரரிடம் 'தகவலை'க்கொடுங்கள் அவர் கள் அம்பலப்படுத்தட்டும், ஆசாமி அகப்பட்டுக் கொண்டு விழிக்கட்டும்; நாம், இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்ற பாவனையில் இருந்துவிடலாம் என்று யூகம் தெரிந்தவர் சொல்லிக்கொடுப்பதுமாக நிலைமை இருகிறது.

உத்தரப் பிரதேசத்தில் மட்டுமல்ல, தம்பி! பல இடங்களிலும்.

ஆனால், அவை குறித்துப் பேச்சு, வெளியே அதிகம் எழாது; மூடி மறைப்பார்கள்; கமிட்டிச் சண்டை என்பார்கள்; இதனால் காங்கிரசுக்கு ஒரு கெடுதியும் வராது என்பார்கள்.

நம்முடைய கழகத்தில் ஒரு சிறு சம்பவம் ஏற்பட் டாலும், பெரிதாக்கிக் காட்டி, ஊர் கூட்டி, குழப்பி, நமது கழகத்தைக் குலைக்க முயற்சி எடுப்பார்கள்; எடுக்கிறார்கள்.

இப்போது, தம்பி! விளக்கமாகிறதல்லவா, ஏன், நம்முடைய விடுதலைக் கிளர்ச்சியை, அந்த விடுதலை யைக் குறிக்கோளாகக் கொண்ட கழகத்தை, காங் கிரஸ் தலைவர்கள், துச்சமாக மதிக்கிறார்கள், ஏளனம் செய்கிறார்கள் என்பதற்கான காரணம்.

சொல்லிவிட்டேன், நீ சோகமடைய அல்ல, ஒவ் வொருவரும் தத்தமது பங்காகக், **கழகத்தின் கண்ணியம் நம் ஒவ்வொருவரின் உரிமையைவிடப் பெரிது என்ற போக் கில், நடந்துகொள்ளவேண்டும் என்பதற்காக.**

ஆனால், இதனால் நமது கழகம் ஒழிந்துபோகும் என்று நம்புவது மட்டுமல்ல, இந்திய துணைக்கண்டத் துப் பல்வேறு இராஜ்ய முதல் மந்திரிகளெல்லாம் கூடிய மாநாட்டில், கனம். காமராஜர், இதனை வெளிப்படை யாகவே பேசியிருக்கிறார்—அறிவாய்.

நாட்டைப் பிரிவினை செய்யவேண்டும் என்ற கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள தி. மு. கழகத்தை, ஒழித் தாகவேண்டும்! அதற்காகக், கழகத்தையே தடுத்து விடலாமா? அல்லது தனித்தனியாகக் கழகத் தோழர் களைப் பிடித்திழுத்துக் கூண்டிலேற்றிக், கடுமையாகத் தண்டித்து அழிக்கலாமா? என்ன செய்து, இந்தப் பிரி வினைச் சக்தியை ஒடுக்குவது என்பதுபற்றிக் கூடிக் கலந்துரையாடினர், முதலமைச்சர்கள்.

அப்போது காமராஜர், தி. மு. கழகத்தின்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை. அது தன்னாலே அழிந்துவிடும். இப்போதே, அதிலே ஏகப் பட்ட பிளவு, சண்டை, சச்சரவு! எலக்ஷனுக்குப் பிறகு, இருக்கவே இருக்காது. அதைப்பற்றிக் கவனிக்காம லிருந்துவிட்டால், அது, தன்னாலே செத்துவிடும் என்று பேசியிருக்கிறார்.

புரிகிறதா, தம்பி! காமராஜர், எதை நம்பிக்கொண் டிருக்கிறார், என்பது. நம்மிடையே பிளவு! நம்மிடையே சண்டை சச்சரவு!!—இதனைத்தான் மலைபோல, நம்பிக் கொண்டிருக்கிறார். இதை அறியாமல், குத்திக் கிளறி விடுவதுதான், யாராலுமே முடியாத, அபாரமான ஆற் றல் என்ற எண்ணத்தில் நடந்துகொள்பவர் எவராயி னும், அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ, காமராஜரின் கரத்தை, கருத்தை, வலிவுள்ளதாக்குகிறார்கள் என்று தான் பொருள்படும்.

**தம்பி! காட்டிலே உள்ள புலி, தன் இரையை, வேட் டையாடித்தான் பிடித்துத் தின்னும். பலப்பல மைல்கள் வேட்டைக்காக ஓடுமாம்! களைப்பு மேலிடுகிற முறையில்! அந்த விதத்தில், அடித்துத் தின்றால்தான், அதற்குத் திருப்தி.**

**பெருஞ்சிறகடித்துப் பறக்கும் கழுகு, இருக்கிறதே அது வேட்டை ஆடாது—துரத்தித் தாக்காது—துளைத்துக் கொல்லாது! ஆடோ மாடோ, கொல்லப்பட்டோ செத்தோ, பிணமாகி, அழுகி, நாற்றம் அடிக்கும் நிலையிலே கிடக்கும் போதுதான், கீழே இறங்கிவந்து, குத்திக்; கிளறித் தின்று பசி தீர்த்துக்கொள்ளும்.**

சில முதலமைச்சர்கள் நம்மை வேட்டையாடிக் கொல்ல வேண்டும் என்று திட்டம் தருகிறார்கள்.

காமராஜரோ, கழுகு முறையைப் பின்பற்றலாம் என்கிறார்.

வேட்டையாட நினைக்கும் திட்டத்தினர், கழகத்தைத் தடைபோட்டு ஒழித்துக் கட்டலாம் என்று நினைப்பதும் பேதைமை, கழுகாகலாம் என்று கூறும் காமராஜரின் யோசனையும் பலிக்கப் போவதில்லை.

விடுதலை இயக்கம், தடையால், படையால், அழிவதில்லை!

விடுதலை இயக்கம் அழிந்துவிட்டது, அழித்துவிட்டோம், என்று எண்ணி எதேச்சாதிகாரிகள் எக்காளமிடலாம், ஆனால், அது புதை குழியைப் பிளந்துகொண்டு, மீண்டும் மீண்டும் எழும்!

சில ஆறுகள் ஓடிக்கொண்டே வருமாம்; இடையிலே காணாமலே போய்விடுமாம்! பிறகோ நெடுந்தொலைவில் வேறோர் இடத்திலே அதே ஆறு கிளம்பி ஓடிவருமாம்! தம்பி! காணாமற் போய்விட்டது என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது, என்ன நடக்கிறது என்றால், ஆறு ஒரு பிலத்தின் வழியாகப் பூமிக்கடியில் சென்றுவிடுகிறது! மறைந்துவிடுகிறது! பிறகு? நெடுந்தூரம் அடிவாரத்திலே ஓடி, மீண்டும் 'குபுகுபு'வென மேல்பக்கம் கிளம்பி, மற்றோர் வெடிப்பு வழியாக வெளியே வந்து, பழையபடி ஆறாகி ஓடுகிறது! விடுதலை இயக்கமும் அப்படித்தான். வெளியே நடமாடவிடாதபடி தடைபோட்டு விடுவதாலே, உணர்ச்சி அழிந்து போய்விடாது! இடம் பார்த்து, காலம் பார்த்து, வழி பார்த்து, பெருக்கெடுத்து ஓடிவரும். எத்தனை முறை, வெள்ளைக்காரக் கவர்னர்கள் சீமைக்குச் சேதி அனுப்பினார்கள்—"காங்கிரஸ் தலைகாட்டுவதில்லை! கல்லறையில் கிடக்கிறது!" என்று பார்த்தவர்களும் இருக்கிறார்கள், அதுபற்றிப் படிப்பவர்களும் புரிந்துகொள்வார்கள்!

சச்சரவுகளால் கழகம் அழிந்துபடும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார், காமராஜர்.

அவர் போன்றாரின் வெளிப்படையான பேச்சைக் கேட்ட பிறகும், கொள்கையில் உறுதிபடைத்த தோழர்கள், கழகத்திலே பேத உணர்ச்சியை மூட்டிவிடுவார்கள் என்று நான் எண்ணவில்லை. அவ்விதம் நடந்து கொள்பவர்களால், ஏற்படும் சிதைவுகளையும் சரிப்படுத்திக்கொண்டு, கழகத்தின் கட்டுக்கோப்பைக் காத்து நிற்கும் கர்மவீரர்களின் எண்ணிக்கை மிகப் பெரிது!

எனவே புலித்திட்டமாயினும் கழுகுத்திட்டமாயினும் கழகத்தை ஏதும் செய்துவிடாது.

தம்பி! உனக்கு எப்போதாகிலும், நீர்கோர்த்துக் கொண்டதுண்டா? சளி பிடிக்கிறது என்பார்களே, அது? எனக்கு அந்தத் தொல்லை அடிக்கடி!

காய்ச்சல், கைகால் பிடிப்பு, வயிற்றுவலி, என்று பல விதமான நோய்கள் ஏற்பட்டால் ஒருவகையிலே நிம்மதி கூட என்று சொல்லலாம் — ஏனெனில் ஏதும் செய்ய முடியாத நிலையில் படுத்துவிடுவோம். இந்தச் சளி பிடிப்பது இருக்கிறதே, இது மிகமிகத் தொல்லை! படுக்க வைக்காது—வேலை செய்யும் நினைப்பைக் கெடுக்காது-ஆனால் வேலையிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கும்போது, தும்மலாகி, மூக்கைத் துளைத்து, குடைந்து, ஆளைப் படாதபாடு படுத்திவிடும்! சாதாரண சளிதானே, என்பர் எவரும். மருத்துவரிடம் சொல்லக்கூடத் தோன்றாது! என்ன உடம்புக்கு என்றுகூட எவரும் அக்கரையுடன் விசாரிக்கமாட்டார்கள். நாமாகக் கூறினால்கூட, "சளிதானே! இதற்கா, இந்தப் பாடுபடுத்துகிறாய்!" என்று அலட்சியமாகக் கூறிவிட்டுச் செல்வார்கள். ஆனால், அந்தச் சளியின் தொல்லை, படுபவர்களுக்குத்தான் தெரியும்.

ஒரு வேடிக்கையான கதை சொல்வார்கள்.

விகடகவியான தெனாலிராமன், ஒருநாள், காளியைத் 'தரிசனம்' கண்டானாம்! கவிகளைக் காளி நேரடியாகக் காணக்கூடிய காலத்துக் கதை!

அந்தக் காளி, ஆயிரமுக மாகாளி!

முகம் மட்டும்தான் ஆயிரம்! கரங்கள் அவ்வளவு இல்லை!

கண்ட உடன் தெனாலிராமன், கடகடவெனச் சிரித்தானாம்.

அவன் அப்படிச் சிரித்தது கண்டு, எப்படி இருந்திருக்கும் மாகாளிக்கு!

என்னமோ கவி பாடுகிறானே, அழைத்தானே, 'பிரசன்னமாகி' ஏதாகிலும் வரம் கேட்பான், கொடுக்கலாம்; ஆசாமி பிழைத்துப் போகட்டும் என்று பார்த்தால், கண்டதும் விழுந்து கும்பிடாமல், கடகடவெனச் சிரிக்கிறானே! எவ்வளவு மண்டைக் கர்வம் இவனுக்கு! சூலாயுதத்தை வீசி இவனைத் தொலைத்துவிடலாம் என்று மாகாளிக்குத் தோன்றிற்று. மறுகணம் கோபம் குறைந்துவிட்டது; "பாவம்! இவனோ கவி! எது மனதில் படுகிறதோ, அதை மிகைபடக் கூறிப் பழக்கப்பட்டவன்! உள்ளத்திலே கள்ளமில்லை! இவன்மீது கோபம் கொள்ளக்கூடாது! என்று எண்ணி, "எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று கேட்டாள்.

"தாயே! தயாபரி! எனக்கு இருப்பது ஒரே மூக்கு! அந்தச் சனியனில் சளி பிடித்துக்கொண்டால், இந்த இரண்டு கைகளும் போதவில்லையே! அம்மா! உனக்கோ ஆயிரம் மூக்குகள்! உனக்குச் சளி பிடித்

துக்கொண்டால் என்ன பாடுபடுவாயோ என்று எண்ணினேன், சிரிப்பு வந்துவிட்டது'' என்று தெனாலி ராமன் பதிலளித்தானும்.

மாகாளியும் விழுந்து விழுந்து சிரித்ததாகக் கதை!

தம்பி! நான் மாகாளியையும் கண்டதில்லை! தெனாலிராமனையும் கண்டவனல்ல. ஆனால், சளியின் தொல்லை நன்றாகத் தெரியும். அதுபற்றித் தெனாலி ராமன் சொன்னதைக் காளி மறுத்தால்கூட, நான் மறுக்கமாட்டேன்; அவ்வளவு தொல்லை தருவது சளி.

நமது கழகத்திலே காய்ச்சல், குன்மம், கைகால் பிடிப்பு, போன்ற கடுமையான நோய் எதுவும் இல்லை! ஆனால், சளி பிடித்துக்கொள்கிறது, அடிக்கடி! தொல்லையான நோய்!

ஆனால், எனக்கே இயல்பாக, அடிக்கடி சளி பிடித்துக்கொள்வதால், இந்தச் 'சளி'த் தொல்லையையும், நான் கூடுமான வரையில் தாங்கிக்கொள்கிறேன். அது நிமோனியா காய்ச்சல் ஆகிவிடாதபடி பார்த்துக் கொள்கிறேன். ஆனால், அதனால், எத்தனையோ மிக முக்கியமான வேலைகள் கெடுகின்றன; தடைபடுகின்றன.

காமராஜரோ, இந்தச் சளியே கழகத்தைக் கொன்றுவிடும் என்கிறார்.

மருத்துவர்கள் மறுத்து உரைப்பார்கள்; கழகத்தின் நடவடிக்கைகளிலே பொறுப்பேற்றுக்கொண்டுள்ள நான், தம்பி! உன் ஒத்துழைப்பால், நிலைமைகளைத் திருத்திவிட இயலும் என்று நம்புகிறேன். என்றாலும், எனக்குத் தெரியும், மற்ற வியாதிகள் ஆபத்தானவை, சளி அசிங்கமானது! எனவே அதற்காக, அது பிடிக்காதபடி பார்த்துக்கொண்டாக வேண்டும்.

விவரமறிந்த எவரும், ஒரு விடுதலை இயக்கத்திலே, சரிவு சச்சரவு, சோர்வு தோல்வி, கலக்கம் மயக்கம், போட்டி பொறாமை சிற்சில வேளைகளிலே மூண்டுவிடுவதால், அந்த விடுதலை இயக்கமும், விடுதலை உணர்ச்சியும் அடியோடு அழிந்துபோய்விடும் என்று கூறமாட்டார்கள்; எண்ணிக்கொள்ளவும் மாட்டார்கள்.

சூரத் காங்கிரஸ் மகாநாட்டிலே ஏற்பட்ட செருப்பு வீச்சுகளைவிடக் கேவலமாகவா, வேறொன்று இருக்க முடியும்.

அப்போது இருந்த காங்கிரஸ் தலைவர்களெல்லாம். சாதாரணமானவர்களா!!

திலகர் நடத்திச் சென்ற காங்கிரசில், 'சூரத்' நடந்தது! அதனால் காங்கிரசார், காவி உடுத்திக் கமண்டலமேந்திக், கடுந்தவம் செய்யக் காசிக்கா போய்விட்டார்கள்! அல்லது காமராஜர், நமது கழகத்தைப்பற்றிக் கூறுகிறாரே, அதுபோலக் காங்கிரஸ் அழிந்தா போய்விட்டது.? ஆத்திரத்தில் அறிவிழந்தனர். கடமை மறந்தனர்; உரிமைக்காக ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டனர். இலட்சியம் பெரிது, கட்சியிலே நமக்குத் தரப்படும் இடம் பெரிதா அல்லவா என்ற எண்ணம் எழக்கூடாது என்பது மறந்தனர், சச்சரவில் ஈடுபட்டனர். பிறகு, ஊரே கூடிப் புத்தி சொல்லிற்று! வெட்கப்பட்டனர்! தமக்குள்ளே ஏற்பட்டுவிட்ட பிளவு கண்டு ஏகாதிபத்தியம் எள்ளி நகையாடக் கண்டனர், நிலைமை புரிந்தது; மனம் திருந்திற்று; காங்கிரசில் மீண்டும் கண்ணியமும் கட்டுப்பாடும் நிலைத்தது; வெற்றி கிடைத்தது.

சூரத் காங்கிரசில், தலைவர்களே ஒருவர்மீது ஒருவர் மிதியடிகளை வீசிக்கொண்டு, கலாம் விளைவித்துக் கொண்ட சம்பவம் குறித்து, வைசிராய், கவர்னர்கள் மாநாடு கூட்டிப் பேசி இருந்தால், பம்பாய் மாகாணக் கவர்னர் என்ன சொல்லியிருப்பார். "காங்கிரசைப் பற்றித் துளியும் கவலைப்படத்தேவையில்லை. அதிலே பிளவு, பேதம், சண்டை சச்சரவு! சூரத் சம்பவம் தெரியுமல்லவா? நாம் அதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், அது தன்னாலே அழிந்துவிடும்.'' என்றுதானே கூறியிருப்பார்.

அதேதான், காமராஜர் இப்போது பேசியிருப்பது.

பேச்சு, இயல்பினால்கூட அமைந்ததல்ல, இடத்தால் அமைகிற பேச்சு!

அத்தனை முதலமைச்சர்கள் கூடிப் பேசுமிடத்தில், தி. மு. கழகம்பற்றிய பிரச்சினை வரும்போது "ஆமாம்! ஆமாம்! தி. மு. கழகம் வளர்ந்துவிட்டது! நாட்டுப்பிரிவினைபற்றிய பேச்சு எங்கும் பரவிவிட்டது! நாங்கள் செய்யும் எதிர்ப்பிரசாரம் பலன் அளிக்கவில்லை. எம்மால் அந்தக் கழகத்தை ஏதும் செய்யமுடியவில்லை.'' என்று ஒரு முதலமைச்சர் பேசமுடியும்! எதிர்பார்க்கத்தான் செய்யலாமா, அவ்விதம் பேசுவார் என்று! கொஞ்சம் மீசையை முறுக்கிக்கொண்டு, கனைத்துவிட்டு ஒரு அலட்சியப் புன்னகையுடன், "தி. மு. கழகம் ஒன்றும் இல்லை. அது தன்னாலே சாகும்!'' என்றுதான் சொல்லத் தோன்றும்.

ஆகவே, தம்பி! காமராஜர் அங்கு அவ்விதம் பேசியது கேட்டு, யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை! கவனிக்கத் தேவையுமில்லை. ஆனால், மிக முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால், இந்தியப் பேரரசு, **நமது கழகத்தின்மீது குறி வைத்துவிட்டது என்பதுதான்!**

சந்தைச் சதுக்கத்துப்பேச்சு, சட்டசபைவரையில் போய்ச் சேர்ந்தது என்று இருந்தோம்.

மற்றோர் கட்டம் இது! இந்தியப் பேரரசு முதலமைச்சர்கள் மாநாடு கூட்டி, தி. மு. கழகத்தை ஒழித்தாக

வேண்டும் என்ற துடிப்பை வெளிப்படுத்தி, விதவித மானதிட்டம் தீட்டியது.

"தலையைக் கொண்டுவருபவர்களுக்கு இனும் தரப் படும்!" என்ற அளவுமட்டும் எழுதித் தொகைபற்றி ஒருமித்த முடிவு ஏற்படாததால், அதனைக் குறிப்பிடா மல் விட்டுவிட்டதுபோல, என்று வைத்துக்கொள் ளேன்.

தி. மு. கழகத்தின் வளர்ச்சியும், திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்துக்குச் செல்வாக்கும், எந்த அளவுக்கு என்றால், முதலமைச்சர்கள் மாநாட் டிலே, கூடிப்பேசவேண்டிய நிலைமைக்கு இந்தியப் பேரரசைக் கொண்டுவந்து விட்டுவிட்டது.

"அதெல்லாம் வீண்புரளி; வேண்டாம்! உங்கள் கழகத்தைப்பற்றி ஒன்றும் முதலமைச்சர்கள் கூடிப் பேசவில்லை. அசாம், பஞ்சாப் ஆகிய இடங்கள்பற்றிப் பேசினார்கள்; அந்தப் பேச்சோடு பேச்சாக, தமிழ்நாடு பற்றிய பேச்சும், தி. மு. க. பற்றியும், எழுந்தது; அவ் வளவுதான்."—என்று பேசுவர், காங்கிரஸ் பேச்சாளர்.

தம்பி! முதலமைச்சர்கள் மாநாட்டிலே, அசாம், பஞ்சாப்பற்றிப் பேசினது உண்மை; பேசவேண்டிய விதமான, நிலைமைகள், நெருக்கடிகள் அங்கே! வங் காளியும் அசாமியனும் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொண்டு மடிகிறார்கள், 'ஜெய்ஹிந்த்' முழக்கமிட்டபடி!! பாஞ்சாலத்தில், எந்தவிநாடி என்ன நடக்குமோ என்று பீதி கொள்ளத்தக்க நிலைமை. எனவே, சட்டம் சமா தானம்காத்திட, அவைபற்றிப்பேச எண்ணம் எழும்.

தமிழ்நாடு நிலைமை அதுவல்ல. இங்கு தி. மு. கழ கம், எந்தவிதமான கிளர்ச்சியிலும் இப்போது ஈடுபட் டிருக்கவில்லை. அமைதியான பிரசாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பஞ்சாபில் கிளர்ச்சி, அசாமில் அமளி! அவை பற்றிப் பேசும்போது, தி. மு. க. குறித்து, ஏன் எண் ணம் பாயவேண்டும்?

அந்தக் கிளர்ச்சி — அமளி ஆகியவைகளைவிட, தி. மு. கழகம், நடத்திவரும் திராவிடநாடுபற்றிய பிர சாரம், தொடர்ந்து, கட்டுப்பாடாக, பட்டிதொட்டிகளி லும், வேகமாகவும் வெற்றிகரமாகவும், கேட்போர் உள் ளத்தைத் தொடத்தக்கவிதத்திலும் நடைபெற்றுக் கொண்டு வருவதுதான், உண்மையில், இந்தியப் பேரரசு எனும் ஆதிக்கத்தின் சல்லி வேரினை அரித்துக் கொண்டு வருகிறது என்பது, அவர்களுக்குப் புரி கிறது; எனவே கவலை குடைகிறது.

கழகத்திலே அவ்வப்போது ஏற்பட்டுவிடும் 'நலிவு கள்' — கழகத்தின் 'தேர்தல்' வேலையை வேண்டு மானால் ஓர் அளவுக்குப் பாதிக்குமேயன்றி, கழகம் மேற் கொண்டுள்ள, நாட்டு விடுதலைக்கு மக்களைப் பக்குவப் படுத்தும், காரியத்தைக் கெடுக்காது, தடுக்காது, என் பதை யூகமுள்ள காங்கிரஸ் தலைவர்கள் அறிந்து கொண்டுள்ளனர். இதனை நம்மிலே 'பிளவு' ஏற்பட்ட போது, ஊர் கூட்டிக் கைகொட்டிச் சிரித்து மகிழ்ந்த ஏடுகளே உணர்ந்து, "எதிர்பார்த்தபடி, தி. மு. கழகம் வலிவு இழக்கவில்லை; வேலை நிற்கவில்லை; விறுவிறுப் பாகத்தான் பணியாற்றுகிறது" என்று இப்போது எழுதிவிட்டன.

இந்தக் கழகத்தை யார் பொருட்படுத்துகிறார்கள்! இதனுடைய வறட்டுக் கூச்சலுக்கு எவர் செவிகொடுப் பார்கள்? என்றெல்லாம் பேசியநிலை போயேவிட்டது! என்ன செய்து, இதை ஒழிப்பது என்று கலந்துபேசும் கட்டம் வந்துவிட்டது.

"இந்தக் கழகத்தை இனி யார் சீந்துவார்கள்! இதிலிருந்த வீரரும் தீரரும் விவேகியும் போய்விட்டார் கள், வெளியே! இனி இது இளைத்து ஈளைகட்டி இருமிச் சாகப்போகிறது என்று மேடைகளிலே காங்கிரசார் பேசிக்கொண்டிருக்கும் நிலை கண்டோம். ஆனால், முதலமைச்சர்கள் முகாம் அமைத்துத் திட்டம் தீட்டு கிறார்கள், தி. மு. கழகத்தை ஒழிக்க!

அடுத்து வர இருக்கும் தேர்தலில் வெற்றி பெரிய அளவு கிடைத்து ஏற்படும் மகிழ்ச்சியைவிட தம்பி! எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியை இந்தச் சேதி தருகிறது!

நாம் கவனிக்கப்பட்டாகிவிட்டோம்! குறி வைத்துவிட்டார் கள்! பட்டபாடு வீண்போகவில்லை! பாரெல்லாம், நமது கழகம் பற்றியும் இலட்சியம் குறித்தும் அறிந்துகொள்ளத்தக்க நிலையை நோக்கி நடைபோடுகிறோம்! — என்ற எண்ணம், என்னைத் தம்பி! என்னென்னவோ இன்ப நினைவுகளைக் கொள்ளச் செய்தது. பாதி இராத்திரி வேளையில், தடதடவெனத் தெருக்கதவு தட்டப்படும் சத்தம் கேட் பது போலவும், திறந்த உடனே, கரங்களைப் போலீஸ் அதிகாரி பற்றி இழுப்பது போலவும், வெளியே தயாராக நிற்கும் வண்டியில் ஏற்றுவதுபோலவும், வழி நெடுக இதுபோன்ற வண்டிகள் நடமாடுவதுபோலவும், திராவிட ரில் ஒரு பகுதியினர், சிறையில் என்னோடு இருப்பது போலவும், இப்படி எல்லாம், காட்சிகள்!!

முதலமைச்சர்கள் மாநாட்டைத் தொடர்ந்து நட வடிக்கைகளைத் துரிதப்படுத்துவார்களானால், தம்பி! என்னென்ன நடைபெறக்கூடும், என்று எண்ணிப் பார்த்தனையா? பொலிவு மிக்க முகத்தினராய், வலிவு மிக்க குரலில், திராவிடநாடு திராவிடருக்கே என்று முழக்கம் எழுப்புகிறார்களே, நமது தோழர்கள், பட்டி தொட்டிகளிலும், மும்மூன்றாண்டு உள்ளே தள்ளலாம், அதற்கே!!

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15
இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

ஆமாமடா, தம்பி! காட்டுக்கூச்சல்! வறட்டுக்கூச்சல்! என்றுர்களே! அது, புதியதோர் குற்றம்!! மூன்று ஆண்டுகள் உள்ளே!! கொடிக்குத் தடை! கூட்டத்துக்குத் தடை! ஏடுகளுக்குத் தடை! இலட்சியத்துக்குத் தடை!! உம்! மளமளவென்று வரக்கூடும். எல்லாம், தேர்தலுக்கு முன்பா, பிறகா, என்பதுதான் பிரச்சினை!

திராவிடநாடு திராவிடருக்கே என்று கேட்பது, பிரிவினைப்போக்கு, அது, சட்டப்படி குற்றம் — மூன்றுண்டு உள்ளே!—என்று நிலைமை ஏற்பட்டால், நாட்டிலே, அந்த முழக்கமே எழாது, இயக்கமே இருக்காது என்று, 'வந்தேமாதரம்' கூறுவது குற்றம் என்று கூறப்பட்டதை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்ட, காங்கிரசார், நம்புகின்றனர். ஏன், தம்பி? நம்மைக் கோழைகள், கொள்கையிலே வலிவற்றவர்கள்! குடும்பம் பெரிது குவலயம் சிறிது என்று கொள்பவர்கள் என்று எண்ணுகிருர்கள்.

"ஏன் வீணுகச் சிக்கிக்கொள்கிறீர்கள்? இன்னின்ஞர் இப்படி வரும் என்று அறிந்து, முன்னதாகவே எங்களுக்குத் திராவிடநாடு வேண்டாம் என்று சொல்லி, தப்பித்துக்கொண்டார்களே, அதுபோல, நீங்களும், ஓடிவிடுங்கள்; இல்லையேல், உள்ளே தள்ளிவிடுவோம்!-என்று டில்லி தெரிவித்துவிட்டது.

தம்பி! என்ன சொல்கிருய்?

"என்ன சொன்ஞர் நேரு பண்டிதர், வெள்ளை ஏகாதிபத்தியம், அவரை மிரட்டியபோது"—என்பதைப் படித்துவிட்டுத்தான் இதனை எழுதுகிறேன்.

என்ன செய்தார்கள் விடுதலைகேட்ட, ஜோமோ கெனியாடாவை? எட்டு ஆண்டுகள் சிறை! பிறகு? அந்த எஃகு உள்ளம் என்றும்போல் இருக்கக்கண்டு, நேற்று, விடுதலை! நெய்ரோபி நகரில், பதிஞயிரக்கணக்கான ஆப்பிரிக்கர் கூடி, ஆடிப்பாடி வரவேற்றனர், கெனியாடாவை! அதைப்படித்துவிட்டு அந்த மகிழ்ச்சியிலே இதனை எழுதினேனில்லை.

ஐயர்லாந்து நாட்டு விடுதலைக்காகப் போராடிய மாவீரன் மடிந்தான்; அவனுடைய புதைகுழிக்கருகே நின்று, மற்ற விடுதலை வீரர் பேசினர். அந்தப் பேச்சைப் படித்துவிட்டு, இதனை எழுதுகிறேன்.

வாய்ச் சொல்லில் வீரரா? கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, வருவது ஏற்கத் தயாராக இருக்கும், விடுதலை விரும்பிகளா? என்று நாடு கேட்கிறது! காலம் கேட்கிறது! தம்பி! என்ன சொல்கிருய்?


விடுதலைக் கிளர்ச்சியில் எதிர்பார்க்கவேண்டிய, அடக்குமுறை அவிழ்த்துவிடப்படும், வேளை நெருங்கிக்கொண்டிருக்கிறது. தம்பி! என்ன சொல்கிருய்? முதல் பந்தியா! பிறகா! வேண்டவே வேண்டாமா! பதில் சொல்லிவிடு! மணி அடித்துவிட்டார்கள்!!

தேர்தல் முடிந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம், என்று பேசுகிருர் காமராஜர்.

தம்பி! தேர்தலின் முடிவு, பார்த்து இலட்சியத்தைப்பற்றிய கருத்தினைக் கொண்டவர்களல்ல, நாம்! தேர்தல், நமக்கு ஏற்பட்டுவிடும் பல வேலைகளிலே ஒன்று!! அது முடியட்டும் என்கிருர் காமராஜர்—என்னைப் பொறுத்தவரையில், தேர்தலுக்கு இரண்டாவது இடம்தான்—முதல் இடம் இலட்சியம் என்ன ஆவது என்பதுதான்! அதனைக்காத்திட, கொடிய அடக்குமுறையையும் தாங்கி நிற்கும் தோழரின் தொகை எவ்வளவு என்பதுதான், எனக்குத் தேவை! மன்னித்துவிடு, தம்பி! எனக்கு, என்று எக்களிப்பில் கூறிவிட்டேன்—நாட்டுக்குத் தேவை.

விடுதலை கேட்கும் எம்மைச் சிறைக்கு இழுத்துச் செல்லும்போது, அந்தச் சிறையில்- எத்தனை M. P.க்கள் எத்தனை M. L. A.க்கள் இருக்கவேண்டும் என்று உங்களுக்கு ஆசை இருக்கிறதோ, அந்த அளவுக்கு தேர்தலிலே வெற்றி தேடிக் கொடுங்கள். பொட்டிட்டு ஆர்த்தி எடுத்து, போய் வருவாய் களம் நோக்கி! என்று வழி அனுப்பி வைப்பது போல, நாட்டு மக்களே! நல்லோர்களே! நீண்டகாலச் சிறை அழைக்கிறது! அங்கிருந்து தூக்கு மேடைக்கும் இழுத்தேகலாம்! உங்கள் ஆதரவைத் தந்து, வழியனுப்பி வையுங்கள்; தேர்தலிலே நீங்கள் தேடித்தரும் வெற்றி, களம் செல்லும் வீரருக்குத் திலகம் இட்டு அனுப்புவதுபோன்றது என்பதைத் தம்பி! இன்றே கூறிவிடு, எதற்கும் தயாராகிவிடு!!

அண்ணன்,



காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.